குங்குமச்
# சிமிழ்
1-5-2013
ரூ 4.00



## இன்பக் கண்ணீர்
விக்கிரமன்

குறுநாவல்

# இன்பக் கண்ணீர்



'டங்டங்டங்' என்று பள்ளிக்கூட மணி அடித்தது. அரையடி நீளங்கூட இல்லாத அந்தப் பழைய தண்டவாளத்திலிருந்து எழுந்த ஓசை, ஓடி ஆடிக் கொண்டிருந்த மாணவ மாணவிகளை ஒரு கணம் திகைக்க வைத்தது. பெருங் கடலலைப்போல் கோஷமிட்டுக் கொண்டிருந்த அவர்கள் கூட்டிலிருந்து கலைந்தோடும் பறவைபோல் சிதறி ஓடித் தத்தம் வகுப்புகளுக்குள் நுழைந்தனர்.

இரண்டாவது மணி அடிப்பதற்குள் அவர்கள் எல்லோரும் கூப்பிய கையுடன் தோத்திரப் பாடல்களைச் சொல்லத் தயாராகிவிட வேண்டும். எங்கும் அமைதி நிலவும். 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே' என்ற அந்தப் பாடல் நானூறு குழந்தைகளின் தொண்டையினின்று எழுந்தது. சுருதியாவது மண்ணாங்கட்டியாவது!



விக்கிரமன்



**ஆ**ளுநர் பதவி வகித்த முதல் இந்தியர் லார்டு சின்ஹா

**மி**ன்சாரம் முதன் முதலில் 2500 ஆண்டுகளுக்கு முன்பு கிரீஸ் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

**செ**யற்கை இதய அமைப்பை முதன் முதலில் வடிவமைத்தவர் டாக்டர் ராபர்ட் ஜார்விக் என்பவராவார்.

நேரமாகி விட்டதே என்று பயந்து பயந்து ஓடிவரும் பள்ளிக் குழந்தைகளின் மனத்தில் பயத்தை இன்னும் அதிகரிக்கச் செய்தது.

அன்றும் வகுப்பிலே தத்தம் இடங்களில் சென்று மாணவ மாணவிகள் நின்றனர். ஆபீஸ் அறையில் கையெழுத்திட்டுவிட்டு உபாத்தியாயர்களும் உபாத்தியாயினிகளும் வகுப்பு அறைகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

நாலாம் வகுப்புக் குழந்தைகளின் எண்பது கண்களும் எதையோ நோக்கின.

வழக்கத்துக்கு மாறாக, மணியடிப்பதற்குப் பல நிமிஷங்கள் முன்னதாகவே வகுப்பிற்குள் நுழைந்துவிடும் நான்காம் வகுப்பு ஆசிரியையை அன்று இன்னும் காணவில்லை.

'டங் டங்' இரண்டாவது மணியும் அடித்தாகி விட்டது.

'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே.'

குழந்தைகளின் குரல் ஏற்றத்தாழ்வுடனும், கிரீச்சென்றும், உச்சஸ்தாயிலும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. அவசர அவசரமாக வகுப்புக்குள் நுழையும் பிஞ்சு நெஞ்சங்களின் உதடுகளும் அப்பாடலை முணுமுணுத்தன.

பாடல் முடிந்தது.

'டங்.... டங்....' பாடம் தொடங்கும் மணி.

"கந்த வேலன்?"

"உள்ளேன் ஐயா!"

"மணி தேவி?"

“வந்திருக்கிறேன் ஐயா.”

என்று அந்தந்த வகுப்பு மாணவர்கள் பெயர்ப் பட்டியல் கூப்பிடப்படுவதன் ஒலியும் அதற்குப் பதில் மாணவர்கள் கூறும் ஒலியும் கேட்டுக் கொண்டிருந்தன.

நான்காம் வகுப்பு இன்னும் காணோம். மாணவர் ஒருவருக்கொருவர் மெல்லப் பேசிக் கொள்வது பெரும் சப்தமாக மற்ற இடங்களில் பெருகிக் கேட்டது.

“என்ன கூச்சல் அங்கே?” என்று தலைமை ஆசிரியை அம்மாள் ஆளோடியிலிருந்து எட்டிப் பார்த்தாள்.

“வகுப்பு ஆசிரியை வரவில்லையா?” என்ற அந்தக் கட்டைத் தொண்டையிலிருந்து எழுந்த கேள்விக் குரலுக்கு இருபது முப்பது கீச்சுக் குரல்கள், “ இல்லை டீச்சர்” என்று பதில் மொழி கொடுத்தன. அப்பொழுதுதான் நான்காம் வகுப்பு டீச்சர் வேகமாகக் கட்டடத்திற்குள் நுழைவதைத் தலைமை ஆசிரியை கவனித்தாள்.

பள்ளிக்கூடத்தில் கமலவேணி வாத்தியாரம்மாவாகத் தொண்டாற்றச் சேர்ந்தது முதல் இதுவரைத் தாமதமாக வந்தது என்பது கிடையாது. தானுண்டு தன் வேலையுண்டு என்று செல்லும் கமலவேணியின் குணம் தலைமை ஆசிரியைக்கு மிகவும் பிடித்திருந்தது. அடக்கமும் திறமையும் நிறைந்த கமலவேணிக்கு மேல் வகுப்புக்களுக்குப் போதிக்கச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று அவள் எண்ணுவதுண்டு. ஒவ்வொரு முறையும் பள்ளி நிர்வாகி பால்வண்ணனாரிடம் பேச்சை எடுக்கும் போதும் ஏனோ அவர் அந்தப் பேச்சை மேலே பேச இடங்கொடாமல் வேறு விதத்தில் திருப்பிவிடுவார். ‘கமலத்திற்கும் அப்படியென்ன அதிக

**உலகிலேயே.....**

**உ**லகிலேயே முதல் இருதயமாற்று சிகிச்சை செய்து கொண்டவர் லூயிஸ்வாஸ். 1967 டிசம்பர் 3–ல் இந்த ஆபரேஷன் நடந்தது. அப்போது அவருக்கு வயது 55. கிறிஸ்டியன் நித்லிங்பர்னாட் என்ற டாக்டர் தலைமையில் 30 டாக்டர்கள் இந்த ஆபரேஷனைச் செய்தனர். ஆனால் ஆபரேஷன் செய்து கொண்டவர் 18 நாட்களில் இறந்து விட்டார். இது நடந்தது தென்னாப்பிரிக்காவில் உள்ள கேப்டவுன் நகரில்.

- முக்கிமலை நஞ்சன்

வயதாகி விட்டது? இன்றைக்கெல்லாம் இருந்தால் பதினெட்டு அல்லது பத்தொன்பது ஆகியிருக்கும்; நமக்கெல்லாம் எத்தனை வருடங்கள் கழித்து இந்தப் பதவி கிடைத்திருக்கிறது; அந்த வயதில் கமலவேணி இன்னும் ஒரு படி முன்னேறி விடுவாள்' என்று எண்ணித் தலைமை ஆசிரியை தனக்குத் தானே திருப்தி செய்து கொள்வாள். பள்ளிக்கூட முன்னேற்றம் ஒன்றையே கண்ணுங்கருத்துமாகக் கொண்ட தலைமை ஆசிரியையிடம் கண்டிப்பு அதிகமாக இருந்தபோது, அவள் அந்த நாளில் வகுப்பாசிரியையாக இருந்தபோது தலைமை ஆசிரியையின் கண்டிப்பைக் கேலி செய்வாள். இப்போது... ஒரு ஆசிரியைக் கூடத் தாமதமாக வரக்கூடாது; ஆமாம்... அதிலும் பொறுப்புள்ள கமலவேணி....

கமலவேணி குனிந்த தலையுடன் வகுப்பிற்குள் நுழைந்து விட்டாள். தலை சரியாக வாரப்பட வில்லை. பின்னலில் மலர் அணியவில்லை. வழக்கமாகத் தீட்டப்படும் 'வெண்' தூளும் முகத்துக்குப் பூசப்படவில்லை.

ஏதோ கேட்கத் தலைமை ஆசிரியை வாயெடுத்தாள். அதற்குள் வகுப்பு மாணவர்கள் எழுந்து நின்று மரியாதை தெரிவித்து அமர்ந்துவிட்டனர். கமலவேணியும் ஆஜர் பட்டியலிலுள்ள பெயர்களைப் படிக்க ஆரம்பித்து விட்டாள்.

நாற்பது பச்சை முகங்களைப் பார்த்து மனவேதனையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற ஒரே எண்ணத்துடன் தான் கடைசி நிமிஷத்தில் முடிவை மாற்றிப் பள்ளிக்கு வந்தாள். என்னதான் புறச் சூழ்நிலை அவள் மனச்சஞ்சலத்தை மாற்றப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாலும் அவள் இதயத்தில் தாக்கிக் கொண்டிருந்த வார்த்தைகள்....

கஷ்டப்பட்டு மூச்சை இழுத்து வெளியே விட்டாள். நெற்றியிலே வியர்வைத் துளிகள் முத்து முத்தாய் அரும்பியிருந்தன. வியர்வையைத் துடைத்துக் கொள்ளக் கைகுட்டையைத் தேடினாள். கைகுட்டையை எடுத்து வரவில்லையா என்ன... சேலைத் தலைப்பால் மெல்லத் துடைத்துக் கொண்ட டீச்சரின் முகத்தையே வகுப்புக் குழந்தைகள் பார்த்துக் கொண்டிருந்தன. இன்று டீச்சர் ஒரு மாதிரியாக இருக்கிறாள் என்று அவை நினைத்திருக்கலாம். சில விநாடி வகுப்பின் அமைதியைக் குலைத்துத் தன்னைச் சரி செய்து கொண்டு பேர் கூப்பிடும் பணியை முடிக்கும் சமயம் பள்ளிக்கூட அட்டெண்டர் வந்து நின்றான். கமலவேணி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"என்ன....?" என்ற அவள் கேள்வியையும் முந்திக் கொண்ட

## முதலில்

தமிழகத்தில் முதலில் கட்டப்பட்ட கற்கோயில் காஞ்சியில் உள்ள கைலாசநாதர் கோயிலாகும்.

## அப்படியா

ஆப்பிரிக்கப் பழங்குடியினரில் 'வொரி' என்ற இனத்தினர் திருமணத்தின் போது மணப்பெண்கள் வாழை இலையினால் தலையைப் போர்த்திக் கொள்வார்கள்.

- முக்கிமலை நஞ்சன்

அவன் "பெரிய டீச்சரம்மா கூட்டியாரச் சொன்னாங்க" என்ற அந்த வார்த்தைகள் கமலவேணியை ஒரு கணம் திகைக்க வைத்தன. தலைமை ஆசிரியையுடன் பேசுவது என்றாலே அவளுக்குச் சந்தோஷம்தான்! இன்று ஏனோ அவள் மற்றவருடன் பேசுவதை விரும்பவில்லை. எதைக் கண்டாலும் கோபமும் ஆத்திரமும்தான் வந்தன. அதற்கு ஏற்றபடி ஏற்பட்ட நிகழ்ச்சிகள்.

கமலவேணி மெல்ல அட்டெண்டர் பின்தொடர்ந்தாள். உடல்தான் படபடக்கிறதா அல்லது பூமியே ஆடுகிறதா?

தலைமை ஆசிரியைக் கண்டு பேச வருபவர்கள் காத்திருக்கும் இடத்தை கடந்து சென்ற போது அங்கு இருவர் உட்கார்ந்திருப்பதைக் கவனித்தாள்.

அவர்கள் எதற்காக இங்கு வந்தனர்? தன்னைக் காண அவர்கள் வந்திருப்பதைக் கூறத்தானா தலைமை ஆசிரியை கூப்பிடுகிறாள்? என்றெல்லாம் எண்ணியவாறு அறைக்குள் சென்ற கமலவேணியை உட்கார் என்று கூட கூறாமல் "கமலம், என்ன புதுசு புதுசாகக் கேள்விப்படுகிறேனே. பள்ளியின் பெயரைக் கெடுப்பது போல் சம்பவங்கள் நடைபெறுகின்றன. உண்மைதானா?" என்று முதல் பாணத்தை வீசினாள்.

இதற்குப் பதிலாக, "அப்படி என்ன புதுசாக் கேள்விப்பட்டீர்கள்?" என்று கமலவேணி கேட்டிருக்கலாம்.

அவள் உதடுகள் பிரிய மறுத்தன. நெற்றியில் அரும்பிய வியர்வை அருவி போல் கன்னத்தில் வடிந்ததை அவள் துடைக்கவில்லை; அவள்

கண் இமைகள் படபடத்தன. நெஞ்சிலே ஆத்திரமும் துக்கமும் வந்து முட்டின.

"ஏன் கமலம், உன்னை நான் ரொம்ப உயர்வா நினைத்துக் கொண்டிருந்தேனே—" அடுத்தபடியாக தலைமை ஆசிரியையின் கேள்வி கமலத்தின் நெஞ்சைக் குத்தியது. தலைமை ஆசிரியை தன்னை அழைத்தது அவளுக்குப் புரிந்து விட்டது.

தன் அண்ணனும், அவன் மைத்துனனும் 'வெயிட்டிங் ரூமி'ல அமர்ந்திருக்கக் காரணமும் அவளுக்குப் புரிந்து விட்டது. இப்பொழுது ஏதோ 'சுடச்சுட' கூறத் தொண்டையைச் சரி செய்து கொண்டாள்.

"வீட்டில் இன்று நீ ரொம்ப தூரம் சண்டை போட்டாயாம். தகராறு செய்தாயாம். அது சம்பந்தமாக உங்கள் வீட்டிலிருந்து அண்ணன் வந்து..."

தலைமை ஆசிரியை பேச்சை முடிக்கவில்லை. கமலவேணியினால் அதற்குமேல் மௌனமாக இருக்க முடியவில்லை. அடக்கி வைத்திருந்த ஆத்திரம் முழுமையும் நெஞ்சைத் தாண்டிவிட்டது.

"ஸிஸ்டர்" என்று அவளை யறியாலேயே கூவினாள்.

"என் சொந்த விஷயம் அதெல்லாம். அதைப் பற்றியெல்லாம் கேட்டு என்னைத் தொந்தரவு செய்வதற்காக நீங்கள் இங்குக் கூப்பிட்டீர்கள் என்பதை அறிந்திருந்தால் நான் வந்தே இருக்கமாட்டேன். குடும்ப விஷயத்தைப் பள்ளிக்கூடத்தில் வந்து கூறிப் புகார் செய்யும் அந்த இரண்டு ஆண்பிள்ளைகளைக் கண்டித்தனுப்பாமல் என்னையே விசாரிக்க ஆரம்பித்து விட்டீர்களே—"

கமலவேணி இப்படிப் பேசுவாள் என்று தலைமை ஆசிரியை எதிர்பார்க்கவில்லை. மூன்று வருடங்களுக்கு மேலாக அந்தப் பள்ளியில்

### மண்டை ஓடு முகமூடிகள்

நியூகினியா காட்டு மனிதர்கள் இறந்தவர்களின் மண்டை ஓடுகளை முகமூடிகளாக அணிகின்றனர். அவற்றில் இறந்தவர்களின் ஆவி இருப்பதாக நம்பி முழுநிலவுக் காலங்களில் அந்த முகமூடிகளை அணிந்து நடனமாடி இறந்த உறவினர்களின் ஆவிக்கு அஞ்சலி செலுத்துகிறார்கள். அந்த வழிபாட்டிற்கு பின் அந்த முகமூடிகளைத் தம் இல்லங்களில் பொக்கிஷமாகப் பாதுகாக்கின்றனர்.

## தெரியுமா?

**செ**ன்னை மாகாணத்திற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டக் கோரி உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தவர் சங்கரலிங்கனார்.

**இ**ந்தியாவிலிருந்து பூடான் நாட்டுக்குச் செல்ல விசா தேவை இல்லை.

**உ**லகின் முதல் சோதனைக் குழந்தையின் பெயர் லூயிஸ் பிரவுன்.

**உ**லகின் மிகச்சிறிய குடியரசு நௌரோவி.

- முக்கிமலை நஞ்சன்

அவள் வேலை செய்து வருகிறாள். அவள் அடக்கமும், ஒழுங்கும் கண்டு ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருந்த தலைமை ஆசிரியையினாலேயே நம்ப முடியவில்லை.

"இல்லை... கமலவேணி... வந்து உன் அண்ணன் வந்து சொல்லும்போதுத் தட்ட முடியவில்லை."

தலைமை ஆசிரியை மேலும் ஏதோ கூற முயன்றாள். கமலவேணி இடைமறித்து, "ஸிஸ்டர், என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். அண்ணனோ, அப்பாவோ யார் வந்தாலும் இப்பொழுது பேச முடியாது என்று சொல்லிவிடுங்கள். என் மனமலையில் தீக்குழம்புகளைக் கொந்தளிக்குமாறு செய்துவிட்ட அவர்கள், அவற்றைப் பீறிட்டு எழச் செய்ய வேண்டாம். நான் போகிறேன்" என்ற கூறித் தலைமை ஆசிரியையின் பதிலுக்குக் காத்திராமலேயே வேகமாக அந்த இடத்திலிருந்து போய்விட்டாள்.

பூமி அதிர அவள் நடந்து செல்லும்போது அவள் அண்ணனும், அவள் மைத்துனனும் இடத்தை விட்டெழுந்து திகைப்புடன் அவளை நோக்கினர்.

தலைமை ஆசிரியை அயர்ந்துபோய் ஒன்றும் புரியாமல் அமர்ந்திருந்தாள்.

கமலவேணியின் அண்ணனும், அவள் மைத்துனனும் மெல்ல தலைமை ஆசிரியையின் அறைக்குள் நுழைந்தனர்.

"பார்த்தீர்களா மேடம்? இதற்கு முன்பெல்லாம் இப்படிக் கிடையாது. இப்ப கொஞ்ச நாளாகத்தான் கமலத்தின் போக்கே மாறியிருக்கிறது. முகுந்தன் எனும் வேலை வெட்டியில்லாதவன் இவள் மனத்தைக் கலைத்திருக்கிறான்" என்று கமலவேணியின் அண்ணன் லோகநாதன்

கூறினான். அவன் மைத்துனன் உள்ளே வராமல் வாயிற்படியருகே நின்றுகொண்டு, தலைமை ஆசிரியையின் அறையில் இருந்த தேசப் படங்களையும், கண்ணாடி பீரோவில் வைக்கப்பட்டிருந்த எலும்புக் கூடொன்றையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஆமாம், ஸார், எனக்கே ஆச்சரியமாய்த் தான் இருக்கிறது. என்னையே தூக்கி எறிந்துப் பேசிவிட்டாளே. அதுக்காக நான் வருத்தப்படவில்லை. குடும்ப விஷயங்களில் தலையிடுவது தப்புதான்... ஆனாலும், வேண்டிய பெண் ஒருத்தி மீது அக்கறைப்பட்டே நான் பேசவேண்டி நேர்ந்தது..." தலைமை ஆசிரியை உணர்ச்சி பொங்கக் கூறினாள்.

ரொம்பவும் வருத்தப்படுபவர்போல் பாசாங்கு செய்த லோகநாதன், "மன்னிச்சுக்குங்க மேடம்; உங்க வார்த்தைக்கு அவள் கட்டுப்படுவாள் என்ற எண்ணத்தில் இவற்றை இங்குச் சொல்ல வந்தேன். ஒரு வாரமாக அவள் போக்குப் பிடிக்காததால் தினமும் வீட்டில் அமர்க்களம்தான். இன்று அது உச்சநிலையை அடைந்துவிட்டது அதனால்...."


அவர்களை உட்காரச் சொல்லவும் முடியாமல் தான் உட்கார்ந்திருப்பதும் மரியாதைக் குறைவாக எண்ணிப் பாதி எழுந்தும் எழாமலும், "யார் அவன்..? அவனைக் கண்டிக்கக் கூடாதா நீங்கள்..." என்று சமாதானப்படுத்த முயன்றாள் தலைமை ஆசிரியர்.

லோகநாதன் பதில் சொல்லும் முன்பாக அவன் மைத்துனன் பேச ஆரம்பித்தான்: "கண்டிப்பதா? அவன் கைகளை முறித்துவிடுகிறேன் என்று நான் கூறுகிறேன். இவர்கள் அனுமதிக்கமாட்டேன் என்கிறார்கள்."

லோகநாதன் சொன்னான்: "அதெல்லாம் செய்வது நியாயமாக எங்களுக்குப் படாததால் ஆரம்பத்திலேயே நம் வீட்டுப் பெண்ணின் மனத்திலிருந்து அவனைக் கிள்ளி எறிந்து விடுவதற்காகத்தான் கமலவேணியுடன் இவ்வளவு தகராறு செய்து சண்டை பிடிக்கிறோம். இல்லாவிடில் வீட்டில் மிகவும் செல்லமாக வளரும் அவளை ஒருத்தர்கூட இதுவரையில் ஒரு வார்த்தை கடிந்து கூறியது கிடையாது."

"அவன் எங்கே வேலை செய்கிறான்... என்ன நடந்தது" தலைமை ஆசிரியை அறிய ஆசைப்படாதவள்போல் செய்தி கேட்டார்.

"அதை இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. பஸ் நிற்குமிடத்தில் இருவரும் சந்திக்கிறார்கள். நேரே கடற்கரைக்குச் செல்கிறார்கள். அதுவரையில் தொடர்ந்து பாக்கிறோம். பிறகு இருட்டும் வகையில் பேசிக் கொண்டிருந்துவிட்டு எப்படி எப்போ திரும்புகிறார்கள் என்பதை



ரமேஷ் கோர்ஜாலா ஆந்திர மாநிலம் ஸ்ரீ காளஸ்த்தியில் பிறந்தவர். தம்முடைய 12 ஆம் வயதிலிருந்தே இவர் ஓவியங்களை வரைந்து வருகிறார். இந்து கடவுள்களை சித்தரிக்கும் இவரது ஓவியங்கள் ரூ.25,000 லிருந்து ஆறு லட்சம் ரூபாய் வரை விற்பனையாகின்றன. ஹைதராபாத் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலிஜியில் இவர் நுண்கலையில் பட்டம் பெற்றவர். 2000 ஆம் ஆண்டின் மகாத்மா காந்தி நூற்றாண்டு நினைவுப் பரிசு மற்றும் ஆந்திர மாநில (2002) கைவினை குழுவின் பரிசு ஆகியவைகளை இவர் பெற்றுள்ளார்.

- க.ரவீந்திரன்

அறிய முடியவில்லை அதற்குப் பிறகும் பின்தொடர்வது சரியெனப் படவில்லை.

"ஏன் தாமதமாக வீட்டிற்கு வருகிறாய் என்று நீங்கள் கேட்கக்கூடாதா?"

பள்ளி விட்டவுடன் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தவள் தாமதமாக வீட்டிற்கு வருவதிலிருந்து தான் அவள் போக்கை ஆராய முற்பட்டோம். பிறகு கேட்டே விட்டோம்."

"அதற்கு அவள் என்ன சொன்னாள்?"

"என்ன சொல்வாள்? பள்ளிக்கூடத்தில் மீட்டிங் என்றாள் ஒருநாள். ஒருநாள் சிநேகிதி வீட்டிற்குப் போனதாகக் கூறினாள். கடைசியாகத் தன்

இந்தியாவில் பனை மரம் அதிகளவில் உள்ள மாநிலம் தமிழ்நாடு.
இந்தியாவின் முதல் அணு ஆற்றல் நீர் மூழ்கி கப்பலின் பெயர் ஐ.என் எஸ்.சக்ரா.
இந்தியாவின் பழங்கால முத்து குளிக்கும் இடம் மன்னார் வளைகுடா.
ஆசியாவிலேயே மிகப்பெரிய மரம் அறுக்கும் ஆலை அந்தமானில் உள்ளது.

காதல் விவகாரத்தைத் தைரியமாகக் கூறிவிட்டாள்.

அச்சமயத்தில் காதலன் உருவம் தோற்றம் குணம் யாவற்றையும் அறிய தலைமை ஆசிரியைக்கு ஆசைதான். எப்படிக் கேட்பது? அதிலும் காலை பள்ளி ஆரம்பத்திலிருந்து இவ்வளவு நேரம் ஊர் வம்பு பேசிப் பொழுதைக் கழித்துவிட்டால்? பள்ளி நிர்வாகி வரும் நேரமாகி விட்டதே...

"சரி... நான் என்ன செய்ய முடியும். கமலத்தைத் தனியே கூப்பிட்டுப் பகலில் பேசிச் சரி செய்யப் பார்க்கிறேன். நீங்கள் இப்போது போங்க...." என்றாள் தலைமை ஆசிரியை, எழுந்து நின்றவாறு.

"உங்கள் பொறுப்பு ரொம்ப இருக்கிறது மேடம். எங்கள் குடும்பத்திலேயே இதுவரை நடக்காத காரியம். எங்கள் குடும்பம் மானமாக வாழும் குடும்பம். காதல் கீதல் என்று இப்படி முறை தவறிப் போவதால் எங்கள் மானமே போய்விடும். நீங்கள் எப்படியும் நல்ல வார்த்தையாகவோ, பயமூட்டியோ அவள் மனத்தை மாற்றப் பாருங்கள் மேடம். பெரிய உதவி உண்டு"

லோகநாதன் கண்கள் கலங்குவதைத் தலைமை ஆசிரியைக் கண்டாள். அவனுடைய கண்ணீரை உண்மையென நம்பினாள்.

"அமைதியாகப் போங்கள் ஸார் – என்னால் முடிந்ததைச் செய்கிறேன். காதலாவது கத்தரிக்காயாவது இந்தக் காலத்தில்! எல்லாம் சினிமாவின் விளைவு" என்று தைரியங் கூற முயன்ற அவள் பேச்சைச் 'சரக்சரக்' என்ற ஒலி தடை செய்தது.

பள்ளிக்கூட நிர்வாகியோ என்று திடுக்கிட்டத் தலைமை ஆசிரியை ஆச்சர்யத்தால் திகைத்தாள்.

கமலவேணி கைப்பையுடனும் கூடையுடனும் உள்ளே நுழைந்தாள்.

அவள் கையில் காகிதமொன்றிருந்தது.

"ஸிஸ்டர்; தலையை ரொம்பவும் வலிக்கிறது. உடம்பும் மனசும் சரியில்லை. லீவு வேண்டும். இதோ அனுமதி கேட்ட கடிதம்" என்று சொல்லிக் கடிதத்தை மேசை மீது வைத்துவிட்டுக் கமலவேணி திரும்பியும் பாராமல் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டாள்.

மூவரும் வாயடைத்துச் செய்வதறியாது நின்றனர்.

## 2


கமலவேணிக்கு அதிசயமாயிருந்தது. தனக்கெப்படி இவ்வளவு துணிச்சல் வந்தது? எதிர்த்து ஒரு வார்த்தை கூட பேசவும் எண்ணாத தான் தலைமை ஆசிரியை முன்பாக, விடுப்புக் கடிதத்தை வீசிவிட்டுப் பதிலுக்குக் கூட எதிர்பாராமல் வர இந்தத் துணிவு எப்படி வந்தது? செய்தது சரியா? என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

தன்னை ஏதோ ஒருவித சக்தி உந்துவதையும் அதன் கட்டளைப்படிக் காரியங்களை இயக்குவதும், அது நடத்திச் செல்வதையும் கமலவேணி உணர்ந்தாள். அந்தச் சக்தியை உண்டாக்கும் காரணபுருஷன் யார்? யாராக இருக்க முடியும்?

நிச்சயமாக முகுந்தன்தான்.

கமலவேணி ஒரு விநாடி பள்ளிக்கூட வெளிப்புற வாயிற்கருகில் நின்றாள். ஏனோ அவளால் ஓர் அடிகூட மேற்கொண்டு எடுத்து வைக்க முடியவில்லை? அந்த வழியே வந்து கொண்டிருந்த சைக்கிள் ரிக்ஷாவை கூப்பிட்டாள். ஏறி அமர்ந்தவுடன் நேரே வீட்டிற்குப் போகும் வழியைக் கூறி

**த**ற்காப்புக் கலைகளில் ஒன்றான குங்ஃபூ என்பதன் பொருள் "ஓய்வு நேரம்".
**த**ஞ்சாவூரின் பழைய பெயர் குமாரபுரி.
**சு**மோ, சாம்போ என்பவை மல்யுத்தத்தின் வகைகள்.
பழங்கால கலிங்கநாட்டின் புதிய பெயர் ஒரிசா.
- முக்கிமலை நஞ்சன்



ஆப்ரிக்க மற்றும் ஆசிய யானைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பாங்காங்கில் உள்ள ஆலயம் ஒன்றின் முன்பு சாக்பீஸினால் வரையப்பட்ட முப்பரிமாண ஓவியம் இது.

- க.ரவீந்திரன்

அவனை வேகமாகச் செல்லப் பணித்தாள். பாதிதூரம் கூட போயிருக்காது ரிக்ஷா. எதிரே முகுந்தன் ஆட்டோ ரிக்ஷா ஒன்றில் வந்து கொண்டிருந்தான். கமலவேணி கவனிக்கவில்லை. முகுந்தன் பார்த்துவிட்டான். படபடவென்று சென்ற ஆட்டோ ரிக்ஷா சட்டென நின்று மீண்டும் வந்த வழியே திரும்பித் தன் ரிக்ஷாவைத் தொடர்ந்து சென்று அதையும் முந்திக் கொண்டு சிறிது தொலைவு போய் நின்றது. முகுந்தன் ஆட்டோ ரிக்ஷாவிலிருந்து இறங்கி நின்றான்.

ரிக்ஷாவில் வந்த கமலவேணி முகுந்தனைக் கண்டுவிட்டாள். ரிக்ஷாவை நிறுத்தச் சொன்னாள். அவ்வளவு நேரமாக ரிக்ஷாவில் வந்தபோது அவள் மனம் நடந்து போனவற்றை யெண்ணிச் சரியா – தவறா என்று ஆராய்வதில் ஈடுபட்டிருந்தது. நடக்கப் போவதை அறியாததால் அவள் மனத்தில் சோர்வு குடிகொண்டிருந்தது. சோர்வு திடீரென அவள் உடலில் இரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்தியும், குறைத்தும் உடலை நடுங்கச் செய்தது. நெஞ்சு படபடத்தது. கண்ணெதிரேயுள்ளவை மறையும் தருணத்தில், சோர்வைப் போக்க வந்த சஞ்சீவி போல் முகுந்தன் நின்றவுடன் கமலவேணி தன் கண்களையே நம்பவில்லை, ரிக்ஷாவிலிருந்து இறங்கி வியப்புடன் முகுந்தனை நோக்கினாள்.

“இந்த நேரத்தில் எங்கே கமல் கிளம்பிவிட்டாய், வெயில் தகிக்கிறதே அவசரக் காரியமோ?” முகுந்தன் சிரித்த வண்ணம் கேட்டான். கமலவேணியின் முகத்தில் சோர்வும் சோகமும் தவிர வேறு எவ்விதச் சலனமுமில்லை.

“வெளியே மட்டுமென்ன உள்ளமும் தகிக்கிறது, முகுந்தன். இங்க நிற்க நேரமில்லை. நீங்க எங்கே போகிறீர்கள்? சந்திக்க

எண்ணினேன்; நல்லவேளை இப்பொழுதே பார்த்துவிட்டேன்" என்று கமலவேணி கூறுவதற்குள், முகுந்தன் கைப் பையிலிருந்துச் சில்லரையை எடுத்து ரிக்ஷாக்காரனிடம் கொடுத்து, அவனைப் போகச் சொல்லிவிட்டு, அவன் வந்த ஆட்டோ ரிக்ஷாவிலேயே அவளையும் ஏற்றிக் கொண்டு கிளம்பினான்.

"எங்கே போறீங்க?" என்று மட்டும் கமலவேணி கேட்டாள்.

"அரசாங்க பாங்க் வரையில்; அங்கே அரைமணி நேர வேலைதான். அதன் பிறகு நாம் அவசரமில்லாமல் ஹைகோர்ட்டின் பின்புறம் மரத்தடியில் உட்கார்ந்து பேசுவோம்" என்றான் முகுந்தன்.

எதிர்பார்த்ததற்கு முன்பாகவே வேலையை முடித்துக் கொண்டு கிளம்பிவிட்டான் முகுந்தன். உயர்நீதிமன்ற வாயிலில் இருவரும் ஆட்டோ ரிக்ஷாவிலிருந்து இறங்கினார்கள். அந்த உயர் நீதிமன்றத்தை இதுவரைக் கமலவேணி கண்டதில்லை. இதையெல்லாம் காணாமல் பள்ளி ஆசிரியையாக இருக்க முடியாதா என்ன?

நீதிமன்ற இடைவேளை கலைந்தது. கறுப்புக் கவுன் அணிந்த வக்கீல்களும், அவர்கள் கரங்களில் வழக்குக் காகிதப் பைல் அவர்களைத் தொடர்ந்து கட்சிக்காரர்களும், சாட்சி கூற வந்தவர்களும், தீர்ப்பு எதிர்நோக்கி வந்தவர்களும், ஒன்றுமில்லாமல் பொழுது போக்க வந்தவர்களுமாக மக்கள் கூட்டம் 'ஜேஜே' என்றிருந்தது.

"ஹல்லோ, முகுந்தன் எங்கே இப்படி? ரொம்ப நாளாச்சு பார்த்து" என்று கறுப்புக் கவுன் வக்கீல் ஒருவர் முகுந்தன் முதுகைத் தட்டினார். முகுந்தன் திடுக்கிட்டுத் திரும்பினான். பிறகு இன்னாரெனப் புரிந்து கொண்டவுடன், "யாரது எம்.வி.கே.யா? அடடா உன்னைக் காலேஜில் பிரிந்த பிறகு மீண்டும் சந்திக்கவேயில்லையே" என்று குசலம் விசாரித்தான்.

எம்.வி.கே. எனப்படும் எம்.வி.கிருஷ்ணசாமியின் கறுப்புக் கண்ணாடி, முகுந்தன் அருகே நிற்கும் கமலவேணியின் மீது படர்ந்தது. என்னதான் வக்கீலுக்குப் படித்துக் கெட்டிக்காரராக வாதம் புரிந்து என்ன பயன். சுத்தமாக இங்கிதம் தெரியாத அந்த வக்காலத்து நிபுணர், "யாரது உன் வொய்ப்பா? சொல்லவேயில்லையே... எப்போப்பா மாரியேஜ் செய்துகொண்டே" என்று கேள்வி மேல் கேள்விகேட்டு நிலைமையைச் சிக்கலாக்க முயன்றவனை முகுந்தன் வெட்டி, "இவள் குமாரி கமலவேணி; ஆனந்த சாகரம் ஆரம்பப் பள்ளியில் டீச்சர். என் சிநேகிதி" என்று

## தெரியுமா?

**ஸ்**காட்லாந்தில் 'கார்டன்ஸ் டவுன்' என்ற மீனவக் கிராமம் ஒன்று இருக்கிறது. இங்கு தொடர்ந்து 6 மாதங்களுக்குச் சூரிய ஒளியே இருப்பதில்லை.

**க**ங்கை நதி உருவாகும் பனிக்குகையின் பெயர் கோமுக்.

**வை**ரம் உருவாகக் காரணமான உலோகம் கார்பன்.

அறிமுகப்படுத்தி, எம்.வி.கே.க்கு ஆத்ம திருப்தி ஏற்படச் செய்தான். முகுந்தன் அங்கிருந்துச் சீக்கிரம் புறப்பட எண்ணி, "அப்போ நான் வரட்டுமா? பிறகு சந்திக்கிறேன்" என்று கூறிப் புறப்பட்டான்.

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்துப் போனால் உடனே விபரீதமாக நினைத்து விடுகிறார்களே 'இந்தப் புத்திசாலி' ஜனங்கள் என்று எண்ணிய முகுந்தன், உயர்நீதிமன்றக் கட்டடத்தின் பின்புறம் சற்றுத் தொலைவில் உள்ள புல்வெளியில் மரத்தடியில் கமலவேணியுடன் அமர்ந்தான்.

அப்பொழுதுதான் அவன் கவனித்தான் கமலவேணியின் முகம் மிக வாடியிருப்பதை.

"கமலி இன்று என்ன இத்தனை வாட்டம். ஏன் பள்ளிக்கூடத்திலிருந்து திடீரெனக் கிளம்பிவிட்டாய்? எங்காவது போக நினைத்தவளை நான் தடுத்து –" என்று முகுந்தன் பேசத் தொடங்கி அங்கு நிலவிய அமைதியை மாற்ற முயன்றான்.

உண்மையில் இருவருடைய வெளிப்புறப் பேச்சில் அமைதி நிலவியதே யொழிய இருவர் உள்ளங்களிலும் வெவ்வேறு விதமான கொந்தளிப்பு இருந்தது. கமலவேணியின் நெஞ்சு வெடித்து விடுமளவுக்கு வேதனைச் சுமையையும், ஆத்திரத்தையும் வைத்துக் கொண்டிருந்தது.

காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாததாலும், வெயிலில் வந்ததாலும் மனச் சோர்வினாலும் களைத்துப்போன கமலவேணிக்குத் தலை சுற்றுவது போலிருந்தது. மெல்ல மரத்தடியில் சாய்ந்தாள்.

முகுந்தன் பதறிப் போனான். கமலி சைகையால் அமைதி அமைதி எனக் கையசைத்துவிட்டு எழுந்தாள்.

முகுந்தன் மெல்ல அவளை அழைத்து வந்து எஸ்பிளனேட் சாலையைக் கடந்து மறு பக்கம் சென்று சிற்றுண்டி விடுதிக்குள் நுழைந்தான். குளிர்ந்த பானம் ஒரு கோப்பையை ருசி பார்த்த

கமலவேணியின் உடலில் தெம்பு பிறந்தது. அரை மணி நேரத்தில் தனக்கேற்பட்ட நிலையை நினைக்கும் போதே அவளுக்கு நாணம் ஏற்பட்டது. முகுந்தன் தன்னைத் தாங்கிய வண்ணம் சிறிது தூரம் நடந்து வந்ததை எண்ணியபோது மேனி சிலிர்த்தது. அவர் தன்னை இப்படி அழைத்து வருவதைத் தெருவில் உள்ளோர் பார்த்திருந்தால்....

பார்த்திருந்தால் என்ன? விதவிதமாகப் பேசிக் கொண்டிருக்கப் போகிறார்கள்! சுய சிந்தனையற்ற மனிதனுக்குப் பிறர் வாழ்வில் நடப்பதை அறிவதில் ஏற்படும் ஆர்வம் மிக அதிகமே!

வீடும், பள்ளிக்கூடமும், கடற்கரையும் தவிர வேறு இடத்தில் தக்க துணையின்றிப் போயறியா அவள் வாழ்வில் கடந்த இரண்டாண்டுகளில் எவ்வளவு மாறாட்டம், போராட்டம்! இன்பச் சூழ்நிலையும், களுக்கென்ற சிரிப்பொலியையும் தவிர வேறு அறியா அவளுக்குத்தான் எத்தனை வேதனை.

இந்த வேதனை ஏன் வரவேண்டும். அமைதியான தடாகத்தை இன்பத்தோணி கொண்டு கடந்தாலும் சலனம் ஏற்படாதிருக்குமோ?

பதினேழு வயதிலேயே 'செகன்டரி கிரேட் டீச்சர்ஸ்' பரீட்சையைப் முடித்துவிட்ட அவளுக்கு உடனே வேலை கிடைத்து விட்டது. இலஞ்சமில்லாத ஆசிரியைப் பணி கிடைத்த காலம். வேலை செய்துதான் ஆக வேண்டும் என்பதில்லை. பொழுதுபோக்குக்காகவும் அத்தொழிலை ஏற்கவில்லை. குழந்தையோடு குழந்தையாக மாறி புத்தி இன்பம் பெற வேண்டும் என்ற ஆசை அவள் நெஞ்சில் ஏற்பட்டுவிட்டது. அந்த இலட்சியம் நிறைவேற 'டீச்சர்' தொழிலைவிட வேறு வாய்ப்பேது? புனிதமான தொழில் என்ற எண்ணத்தை மாற்ற முடியவில்லை. அவள் சகோதரன் லோகநாதனுக்குத் தங்கை பள்ளி ஆசிரியையாவது பிடிக்கவில்லை. அதற்குக் காரணமில்லாமலில்லை. டீச்சர்களைப் பற்றி அவனுக்குத் தவறான கருத்து. அத்தொழிலுக்கு வருபவர்கள் அநேகமாகக்

### அப்படியா

**உ**லகின் மிகப்பழமையான தேசியக் கொடி டென்மார்க் நாட்டைச் சேர்ந்தது.

**க**ண்களைத் திறந்து கொண்டு தும்ம முடியாது.

**உ**லோகங்களின் அரசி எனப்படுவது வெள்ளி.

- முக்கிமலை நஞ்சன்

கணவனை இழந்தவர்கள்; அல்லது கணவனால் கைவிடப்பட்டவர்களாக இருப்பார்கள். வாழ்க்கையின் பொங்கும் புது இன்பமறியா அப்பேதைகள் சட்டென ஆண் வலையில் விழுந்து விடுவார்கள் என்று தவறான எண்ணம் அவனிடம் ஆழமாக ஏற்பட்டிருந்தது. அவனுடைய நண்பர்கள் அவன் எண்ணத்திற்கு ஆதரவு தந்தார்கள். அத்துடனின்றி, பள்ளி முடிந்து செல்லும் இளம் பள்ளி ஆசிரியைகளுக்குத் 'துணையாகச்' செல்வதில் லோகநாதனுக்கு உதவுவார்கள். இவர்களுடைய 'மெய்க்' காவல் படையினால் அந்த வட்டாரத்து ஆசிரியைகள் பயமின்றி 'நடமாடினர்!' ஆனால் அவர்களுக்கு இந்த ஒரே பயம் காவல் படையின் பொல்லாத கண்களிடமே! நாளாக ஆக அவனுக்கே தன் செய்கை தவறெனப்பட்டது. அந்த நிலையில் தன் தங்கையும் டீச்சரானால், வேட்டையாடும் ஆண்கள் வீணாகப் பின் தொடர்வார்களே என்று தவறாக எண்ணியதால் தங்கை பள்ளி ஆசிரியையாவதை எதிர்த்தான். தந்தையும் – தாயும் ஆதரவு கொடுத்ததால் கமலவேணி தன் எண்ணத்தில் வெற்றி கண்டாள்.

பள்ளிக்கூடத்துக்கு அவள் போய்வர ஆரம்பித்த பிறகு லோகநாதனும் தனது கருத்தை மாற்றிக் கொண்டான் பள்ளியில் ஆண் உபாத்தியாயர்களே இல்லாமல் எல்லாரும் பெண்களே. அதனால் கமலவேணியின் பெற்றோர்களும் நிம்மதியாக இருந்தனர்.

ஆண்வர்க்கமே மற்றொரு ஆணைக்கண்டு அஞ்சுகிறது. வயது வந்த பெண்களை வீட்டில் வைத்துக் கொண்டிருப்பது நெருப்பை மடியில் கட்டிக் கொண்டிருப்பது போல் என்று பெண் வர்க்கமே கூறுகிறது. இப்படி பரஸ்பரம் ஓர் இனம் தன் இனத்தின் மீதே நம்பிக்கை வைக்காத நிலை வளர்ந்து வரும்போது கமலவேணி புறஉலக சேஷ்டைகள் எதையும் கவனிக்காமல் பள்ளியுண்டு தானுண்டு என்று ஐக்கியமாகிவிட்டாள்.

அந்த அமைதிக் குளத்தில் முகுந்தன் பார்வை எனும் சிறு சருகு விழுந்துச் சலனத்தை ஏற்படுத்தியது. சிறு சிறு அலைகள் வளர்ந்து வளர்ந்து விரிந்துப் பெரியதாகிக் கொண்டே இருந்தன.

காலையில் நடைபெற்ற சம்பவத்தைக் கமலவேணி சொல்லிக் கொண்டே போகும் போது முகுந்தன் திடுக்கிட்டான். வளரும் கொடிபோல் வளர்ந்து வந்த தங்கள் காதல் பயிர்க்கு இது போன்ற இடர்ப்பாடா? தூய அன்புக்கு என்றுமே துயரும் தொல்லையுமா?

கமலவேணிக்கு நேர்ந்த தொல்லை முழுமையும் அறியத் துடித்தான் முகுந்தன். நடு வீதியிலே நின்று என்ன பேசுவது? அங்கே சென்று

கொண்டிருந்த பேபி டாக்ஸியைக் கைதட்டி அழைத்தான். சென்னையில் பெரிய டாக்சிக்கு அடுத்து 'பேபி டேக்சி' இயங்கியது.

கமலவேணி திகைத்தாள்.

"கமலி, வா. கடற்கரைக்குப் போவோம் அங்கு மனம் விட்டுப் பேசலாம்" என்று சொல்லிக் கொண்டே கமலவேணியின் கரத்தைப் பிடித்து மெல்ல ஏறுமாறு செய்தான். தானும் அமர்ந்து கொண்டான். டிரைவர் 'மீட்டரைச் சரி செய்யவும், 'கிணிங்' என்ற ஒலியுடன் டாக்ஸி கிளம்பியது.

இவர்களைத் தொடர்ந்து கவனித்து வந்து லோகநாதனும் அவன் மைத்துனனும் அவசர அவசரமாக மற்றொரு 'டாக்ஸி'யை நாடி ஓடினர்.

## 3

முகுந்தனும், கமலவேணியும் ஏறிச் சென்ற அந்த டாக்ஸியை லோகநாதனால் பின்தொடர முடியவில்லை. திருவல்லிக்கேணி கடற்கரை முழுவதும் லோகநாதனும் அவன் நண்பனும் எதையோ தொலைத்து விட்டுத் தேடுவதைப் போல் தேடினார்கள். கமலவேணியும், முகுந்தனும் அங்கிருந்தால் தானே!

டாக்ஸி திருவல்லிக்கேணிக் கடற்கரையை அடைவதற்கு முன்னமே கமலவேணி கூறினாள்; "எனக்கு என்னவோ இந்தக் கடற்கரையைக் கண்டால் பிடிக்கவில்லை. கடற்கரைக்குப் போகவேண்டாம்" என்று.

முகுந்தன் பரபரப்பான நிலையிலிருந்தான். அவன் நினைவெல்லாம் வேறு எங்கோ.

"என்ன சொல்கிறாய் கமலவேணி?" முகுந்தன் கமலவேணியின் பக்கம் திரும்பினான்.

"இப்போது கடற்கரை போக வேண்டாம்" என்றாள் கமலவேணி. அவள் குரலில் இருந்த மாறுதலை முகுந்தன் கவனித்தான்.

"அப்பொழுது சரி என்றாயே கமலவேணி..."

### அப்படியா

**தா**வரங்களின் வளர்ச்சியைக் காண பயன்படும் ஸஃபக்மோ கிராஃப் என்ற கருவியைக் கண்டுபிடித்தவர் சர் ஜெகதீச சந்திரபோஸ்.

**உ**லக பேரீச்சம்பழம் ஏற்றுமதியில் ஈராக்கே முன்னணியில் உள்ளது.

**சி**லி நாட்டு மக்கள் அணியும் ஆடைக்கு ஹுவாஸோ எனப்பெயர்.

"ஆமாம்: நான் அப்போது சொன்னேன். நான்தான் இப்போது வேண்டாம் என்கிறேன். என் மனசு சரியாய் இல்லை. ஒரு நிலையில் இல்லை. வேறு எங்காவது போகலாம்..."

"உட்கார்ந்து கொஞ்சநேரம் பேசுவதற்கு ஏற்ற இடம் எதுவும் சென்னையில் இல்லையே, கமலவேணி. மற்ற இடங்களிலெல்லாம் நம்மைக் காட்சிப் பொருள்கள் போலல்லவா பார்ப்பார்கள்."

"சரி அப்படியென்றால் எங்குமே போகவேண்டாம்" என்று கமலவேணி கூறினாள். முகுந்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

டாக்ஸி நின்றது. முகுந்தன் கணக்குப் பார்க்காமல் பணத்தைக் கொடுத்துவிட்டு நடைபாதை மண்ணில் எதிரே தெரியும் பட்டமளிப்பு விழா மண்டபத்தைப் பார்த்த வண்ணம் நின்றான்.

கமலவேணி அவனை அவசரப் படுத்தினாள். அந்தச் சாலையைக் குறுக்கே கடந்து எதிர்ப் பக்கம் செல்லத் தொடங்கி விட்டாள். முகுந்தனும் பின் தொடர்ந்தான்.

"நடந்தே போய் விடுவோமே" என்று கமலவேணி கூறவும் ஆட்டங்கொடுத்த மனம் முகுந்தனுக்கு ஒரு நிலைக்கு வந்தது.

"அதுவும் சரி தான்; நல்ல யோசனை. பேசிக் கொண்டே போகலாம்" என்று கூறிய போது, அவனுடலில் ஏதோ புதுத்தெம்பு வந்து விட்ட உணர்ச்சியும், அதே சமயம் தொல்லை தரும் செய்தியைக் கேட்கப் போகிறோம் என்ற உணர்ச்சியும் மாறி எழுந்தன.

கடற்காற்று வாங்க வரும் கூட்டத்தின் எதிர்நீச்சல் போட்டு இவர்கள் செல்லும் போது ஒன்றும் பேச முடியவில்லை. அதே சமயம்தான் கடற்கரையில் கமலவேணியை லோகநாதன் தேடிக் கொண்டிருந்தான். மௌனமாக இருவரும் நடந்து சென்று கொண்டிருந்தனர்,

கமலவேணியிடமிருந்து அவள் வீட்டில் நடந்தவற்றை அறிய அவன் மனம் துடித்தது.

கமலவேணி பதில் பேசாமல் வந்தாள். அவள் சிந்தனையெல்லாம் எங்கோ சுழன்று கொண்டிருந்தது. தான் போகும் பாதை சரிதானா என்று கூட ஒரு வினாடி அவள் மனம் எண்ணியது. தோற்றத்திலும், பேச்சிலும் மயங்கி முகுந்தனுடன் பழகுகிறோமே அவர் தன்னை அழைத்துச் செல்லும் பாதை தவறனாதோ என்ற பயமும் உண்டாயிற்று. ஆனால், இத்தனை காலம் பெற்று வளர்த்தவர்களுக்கும் மேல் ஒரு புது மனிதரிடம் உயிரையை ஒப்படைக்கும் நிலைமை ஏற்படுவதென்றால் தவறான பாதையாயினும் பரவாயில்லை என்றே எண்ணினாள்.

ஆனால், தாய்க்கும் தந்தைக்கும் என்ன அவ்வளவு கோபம்? எல்லாம் அண்ணன் லோகநாதனுடைய தூண்டுதல்தான். இல்லாவிடில் ஒரு வார்த்தை கோபமாகக் கூறியறியா தந்தை அன்று அப்படிக் கூச்சல் போடுவானேன்...?

கமலவேணியின் மௌனத்தை முகுந்தன் கலைத்தான். "என்ன கமலம் பலத்த யோசனை....?" என்றான்.

கமலவேணி ஒருமுறை முகுந்தனை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வையில் எத்தனையோ பதில்களும், கேள்விகளும் பொதிந்திருந்தன.

"யோசனையா? யோசிக்காமல் என்ன செய்வது. தென்றல் புயலாக உருவாகி வரும்போது.." என்றாள் கமலம்.

"புதிர் போடாதே கமலம்... நடந்தவற்றையெல்லாம் சொல். மௌனமாக நடந்து மெல்ல யோசிக்க வேண்டிய சமயமில்லை..."

"என்னத்தைச் சொல்ல, சுருக்கமாகச் சொன்னால் நான் உங்களோடு பேசுவதும் பழகுவதும் வீட்டில் எவருக்கும் பிடிக்கவில்லை..."

**ம**லேரியா என்பது இத்தாலிய சொல். இதன் பொருள் 'கெட்ட காற்று' என்பதாகும்.

**நா**ய்க்கு 'ரேபிஸ்' என்ற நோய் வந்தால் அதற்கு வெறி பிடிக்கும்.

**ப**ல்லியில் சுமார் 3000 இனங்கள் இருக்கின்றன.

**பு**கைப்படச் சுருளில் பொதிந்து உள்ள உலோகம் வெள்ளி.

- முக்கிமலை நஞ்சன்

“நீ என்னுடன் பழகுவது எப்படித் தெரியும்...?”

“தெரியாமல் என்ன, நாம் ரகசியம் என்று நினைப்பது நம் வரையில்தான்.”

“என்னைக் கண்டித்திருக்கலாமே....”

“உங்களை அவர்களுக்குத் தெரியாது. தெரிந்தால் நிச்சயம் கண்டிப்பார்கள். இல்லை; கால் கையை உடைத்து விடுவார்கள்.”

“பேஷாகச் செய்யட்டும்! நொண்டி மாப்பிள்ளைக்குப் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுக்கட்டும்.”

“அதைத்தான் கனவாக்குவதற்குத் திட்டமிடுகிறார்கள்...”

“ரொம்ப நல்லதாகப் போச்சு.... அதைத்தானே விரும்புகிறேன்...”

கமலம் இதைக் கேட்டுக் கோபமாகத் திரும்பினாள். “எதை விரும்புகிறீர்கள்.... அப்படியென்றால் என்னை நீங்கள்...”

“பைத்தியமே, கால் கையை உடைத்து நொண்டியாக்குவது கனவு என்று சொல்ல வருகிறேன். உன் பெற்றோர்கள் இன்னும் உலகத்தைப் புரிந்து கொள்ளவில்லை...”

“நமக்கு அதைப் பற்றி என்ன? நம்மைப் பற்றி நமக்குக் கவலை. இனியும் இப்படியே நாம் சந்தித்துப் பேசிக் கொண்டிருக்க முடியாது. ஒன்று உடனே நாம் கலியாணம் செய்து கொள்ள வேண்டும்.. இல்லாவிடில் ஒருவரையொருவர் மறந்து விடவேண்டும்...” கமலவேணி அழுத்தம் திருத்தமாகப் பேசினாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன.

“கமலி, நான் கேட்க வேண்டிய கேள்வியை நீயல்லவா கேட்கிறாய். முன்வைத்த காலைப் பின் வைக்கமாட்டேன். நாளைக்கே கலியாண ஏற்பாடுகளைச் செய்யத் தயார். எனக்கு என்ன கமலி, பந்தமிருக்கிறது? வயதான தாய் இருக்கிறாள். அவள் நான் சொன்னதைத் தட்டப் போவதில்லை. அவள் என் பேச்சை மீறப் போவதில்லை. உன் வீட்டு ஆக்ஷேபணையைப் பற்றித்தானே யோசிக்க வேண்டியிருக்கிறது...”

“ஆக்ஷேபணை! ஆக்ஷேபணை! கலியாணம் செய்துகொள்ளப் போவது நாமா அவர்களா? விளையாட்டாகப் பேசாதீர்கள் அத்தான், ஒவ்வொரு விநாடியும் எனக்கு யுகமாகப்படுகிறது. இன்று பள்ளியில் நடந்த நிகழ்ச்சி இரவு வீட்டில் எதிரொலிக்கப் போகிறது. என்னென்ன விளைவுகள் ஏற்படுமோ? ராவுக்கு ராவே எந்த வரனையாவது அண்ணா

ஹாங்காங்கில் உள்ள டிஸ்னிலேண்ட் கோட்டை முன்பு, டிஸ்னியின் கார்டூன் பாத்திரங்களான மிக்கி மற்றும் மின்னி மவுஸ், சிந்தர்லா டோனால்ட் ஆகியவை காட்சி தருகின்றன. உலகச் சிறுவர் சிறுமியரின் உள்ளம் கொள்ளை கொண்ட கார்ட்டுன் பாத்திரங்களாயிற்றே இவை!

- க.ரவீந்திரன்



தேடிக் கொண்டு வந்து 'கட்டு தாலியை' என்பான்... அப்புறம்..."

"அந்த வரன் நானாக இருக்கக்கூடாதா?..."

"இருக்க முடியவில்லையே அத்தான், முடியவில்லையே. அப்பாவிடம் எவ்வளவு மன்றாடினேன். உங்கள் குணத்தைப் புகழ்ந்தேன். என்னைச் சிறு பெண் என்றார். பார்த்தவுடன் பிடித்து விட்டது; என் இதயத்தில் இடம் பெற்று விட்டீர்கள் என்றேன். பருவக் கோளாறு; கதை – சினிமாவில் நடப்பதை ஒப்பிக்காதே என்றார். அதெல்லாவற்றையும் விட நீங்கள் வேறு ஜாதியாம். நாங்கள் வேறு ஜாதியாம்.... மீதி விஷயங்களில் எல்லாம் அப்பா திருப்தி பட்டால் கூட அம்மாவும் அண்ணாவும் சாதி விட்டுச் சாதி சம்பந்தம் செய்து கொள்ளச் சம்மதிக்கவில்லை. முகுந்தா, அதனால் இனி ஒரு கணமேனும் தாமதித்தால் நமது அன்புக்கு அணைபோட்டு விடுவார்கள்..."

கமலவேணி மூச்சுவிடாமல் பேசியதை முகுந்தன் கேட்கக்கேட்க அவனுக்குச் சமூகத்தின் மீதும், சாதி மீதும், கமலவேணியின் பெற்றோர்கள் மீதும் எல்லாவற்றையும்விடத் தன்மீதே கோபம் கோபமாக வந்தது. அந்தச் சமயம் மௌனம்தான் கை கொடுத்துதவியது.

முகுந்தன் யோசித்தான். ஏதோ

**தெரியுமா?**

தமிழ்நாட்டில் நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள ஊர் ஆடுதுறை.
சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ள பழம் சாத்துக்குடி.
ஐரோப்பாவின் உயரமான எரிமலை எட்னா.
கதிரியக்கத்தால் ரேடியம் காரீயமாக மாறுகிறது.

முடிவுக்கு வந்தவன் போல், "கமலி நாம் இங்கிருந்து கிளம்பி விட வேண்டியது. நாளை மறுநாள் திருநீர்மலையில் திருமணம் சரிதானே?"

கமலி முதலில் ஏதும் பதில் சொல்லவில்லை. முகுந்தனது உறுதியான சொல்லில் நம்பிக்கை வைத்தாள்.

பிறகு முகுந்தன் எப்படி வீட்டிலிருந்து கிளம்புவது என்பதைப் பற்றிச் சொல்லிக் கொண்டே வந்தான். ஊரை விட்டுப் போன பிறகு என்ன செய்வது என்பதைப் பற்றிச் சொன்னான்.

"எனது ராஜினாமாவை நான் நாளைக்கே கொடுத்து விடுகிறேன்" என்றான்.

"ஹூஹூம் கூடவே கூடாது; நீங்களும் வேலையை விட்டுவிட்டால் அப்புறம் எப்படி, பிழைப்பது. ஊரார் சிரிக்கும் போது அவர்கள் முன் விழுந்தது போலாகும்" என்றாள்.

அவள் யோசனை முகுந்தனுக்குச் சரியெனப்பட்டது. ஒரு விநாடியில் சரியான யோசனையில்லாது மதியை இழந்து விட்டோமே என்று எண்ணினான்.

ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் வரையில்தான் அவர்களால் நடக்க முடிந்தது. கமலவேணி தள்ளாடியதைக் கண்ட முகுந்தன் அங்கே சென்று கொண்டிருந்த ஆட்டோ ரிக்ஷாவைக் கூப்பிட்டான்.

மீண்டும் ஆட்டோ ரிக்ஷா பறந்தது. மாம்பலத்தில் கமலவேணி வசிக்கும் தெருவின் முனையிலேயே நிறுத்தி விடுமாறு கமலவேணி கேட்டுக் கொண்டாள்.

"அப்போ, நான் சொன்னது எல்லாம் நினைவிருக்கிறதா?" எனக் கடைசியாக ஒரு தடவை கேட்டான் முகுந்தன்.

தலையை அசைத்தாள் கமலவேணி. திரும்பிக்கூடப் பாராமல் வீட்டை நோக்கி வேகமாக நடந்தாள். வேதனை ஒருபுறமும், துளிர்த்த

இன்பம் ஒருபுறமும், நாளை செய்யப் போகிற காரியத்தைக் குறிக்கும் திகில் ஒரு புறமாக வீட்டிற்குள் நுழைந்த கமலவேணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

## 4

“**வா**ராணியம்மா வா!” என்ற அதட்டல் குரல் கேட்டுக் கமலவேணி திடுக்கிட்டாள். தந்தை ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்திருந்தார். எதிரே அண்ணன் லோகநாதன் தூணைப் பிடித்து நின்றிருந்தான். அவன் ஏதோ அப்போதுதான் சொல்லி முடித்திருக்க வேண்டும். அவன் கூறி முடிப்பதற்கும் கமலவேணி வீட்டிற்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

தந்தையின் குரலைத் தவிர வேறுவித ஒலியே இல்லாமல் வீடு நிசப்தமாக இருந்தது. தந்தையின் முகத்தில் ஆத்திரத்தின் சாயல். கமலவேணி பதிலே பேசவில்லை. கையிலிருந்த நோட்டுப் புத்தகங்களை மேஜை மீது வீசி விட்டு குழாயடிக்குச் சென்றுவிட்டாள். அவள் காதுகளில் தாய் பேசியது விழுந்தது. “இந்தச் சமயத்தில் குழந்தையை அதட்டாமல் இதமாக எடுத்துச் சொல்லுங்கள். அப்படி என்ன வயதாகிவிட்டது அவளுக்கு? அந்தப் பாவி ஏதோ பேசி மயக்கியிருக்கிறான். அவள் மயங்கிவிட்டாள்.” தாயின் இந்தச் சொல் கமலவேணியின் தந்தையை இன்னும் ஆக்ரோஷமாகப் பேசத் தூண்டியது.

“குழந்தை! குழந்தையா அவள். நூறு குழந்தைகளுக்குப் புத்தி கற்பிக்கும் வயசு. இவளே இப்படி குடும்ப கௌரவத்தைக் கெடுத்தால்...”

“இப்போது இடையே லோகநாதன் புகுந்து, “நான் அப்பொழுதே சொன்னேன் இந்த ஆசிரியைத் தொழில் வேண்டாமென்று, காலாகாலத்தில் கலியாணத்தைப் பண்ணியிருந்தால் இந்த வம்பெல்லாம்

**ம**துரை மாநகரை உருவாக்கியவர் பாண்டிய மன்னன் குலசேகரபாண்டியன்.

**மு**தன் முதலில் தமிழ்நாட்டில் தனித்தமிழ் இயக்கத்திற்கு வித்திட்டவர் மறைமலையடிகள்.

**நி**க்கோபார் தீவுக்கு சோழர்கள் சூட்டிய பெயர் நக்காவரம்.

- முக்கிமலை நஞ்சன்

ஏது?" என்று கூறி, எரியும் தீயில் எண்ணெயை ஊற்றினான். லோகநாதனின் மனைவி சும்மா விடவில்லை. "உங்களுக்கெல்லாம் சௌகரியத்தைச் செய்கிறாள். கலியாணச் செலவெல்லாம் ஒன்றுமில்லாமல், மாப்பிள்ளை பார்க்கும் தொல்லையில்லாமல் அவளே முடித்துக் கொண்டு விட்டாள்!" இதை அவள் சிரித்துக் கொண்டுதான் சொன்னாள். இந்தச் சிரிப்பு கமலவேணிக்கு நெருப்பாக இருந்தது. ஆத்திரம் பொங்க அவள் ஏதோ பேசுவதற்காக நடுக் கூடத்திற்கு வந்தாள். அப்பொழுது கமலவேணியின் தாயார் கமலத்தின் முகவாய்க் கட்டையைத் தொடும் பாவனையாக, "இவ்வளவு நேரம் எங்கே கண்ணு போயிருந்தாய்" என்று கேட்டாள்.

"எங்கே போவேன்? தினம் போகிற இடத்துகுத்தான்" சலிப்புடன் பதில் சொன்னாள் கமலவேணி.

"ஆமாம், தினம் போகிற மெரினா பீச்சுக்கு! என் தங்கை என்று சொல்லிக் கொள்ளவே எனக்கு வெட்கமாக இருக்கிறது.." என்றான் லோகநாதன். அவன் மேலே பேசிக்கொண்டு போவதற்குள் தந்தை ஊஞ்சல் பலகையிலிருந்து ஆக்ரோஷமாக எழுந்து "கமலம் கடைசியாகக் கேட்கிறேன்: நீ அவனோடு ஊர் சுற்றுவது அழகாக இல்லை. ஊர் உலகம் என்ன நினைக்கும்? நீ அவனை மறக்கப் போகிறாயா இல்லையா?"


கமலவேணியும் சற்றுக் குரலை உயர்த்தி, நான் பச்சைக் குழந்தையில்லை. எனக்கும் விபரம் தெரிந்திருக்கிறது. ஊர் உலகம் என்ன சொல்லக் கிடக்கிறது? நாளை வரும் கணவருடன் இன்று உலாவப் போகிறேன். இதில் என்ன தவறு, அப்பா? நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். நான் அவரைக் காதலிக்கிறேன். அவரைத் தான் மணந்து கொள்வேன்" என்றாள் அழுத்தமான குரலில்.

மகளின் அழுத்தந் திருத்தமான இந்தப் பேச்சைக் கேட்டு எல்லோரும் அசந்துவிட்டனர். 'கமலவேணியா பேசுகிறாள். குழந்தை குழந்தையென்று நாம் செல்லமாகச் சொல்லிக் கொண்டிருந்தோமே அந்தக் குழந்தையா இப்படி பேசுகிறது?' என்று தாய் எண்ணினாள். அவள் கண்களில் நீர் ததும்பியது. லோகநாதன் கோபமாக அவளை நோக்கிக் கையை ஓங்கிக் கொண்டு சொன்னான். "அவனைத்தான் மணப்பாயா? அவன் எந்த ஜாதி தெரியுமா. புத்தி உனக்கு ஏன் இப்படிக் கெட்டுப்போய்விட்டது. கடைசியாகச் சொல்கிறேன். என் உயிருள்ள வரை நீ அவனை மணக்கச் சம்மதிக்க மாட்டேன்."

கமலவேணி இதைக் காதில் வாங்கி கொண்டாளோ இல்லையோ நேரே வாசல் அறைக்குள் போய்விட்டாள். அவளுக்குத் தலை பாரமாகக்

சிட்னியில் வாழும் 34 வயதான ஆப்கானிஸ்த்தான் ஓவியர் 'காதிம் அலி' இவர் ஆப்கானிஸ்தானிலிருந்து பாகிஸ்தானில் குடியேறியவர். ஆனால் இவரது இதயம் ஆப்கானிஸ்தானில் நடந்த சம்பவங்களால் துடிதுடித்தது. 'ருஸ்தம்' என்ற தலைப்பில் இவர் வரைந்த ஓவியங்கள் உலகத்தின் பாராட்டுதல்களைப் பெற்றது 'ருஸ்தம்' என்பவன் 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீக மாவீரன். இவர் வரைந்த ஒரு ஓவியத்தில் புத்தர் கமிபி வலைக்குள் இருப்பது போலவும் மத அடிப்படைவாதிகள் பூதங்களைப்போல் வேடிக்கைப் பார்ப்பதாகவும் சித்தரித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் பாமியான் பகுதியில் 6 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட புத்தர் சிலைகளை தாலிபான்கள் மார்ச் 2001 இல் அழித்ததை இந்த ஓவியம் நினைவூட்டுகிறது.

- க.ரவீந்திரன்



கனத்தது. அன்று முழுநாளும் ஏற்பட்ட அடுக்கடுக்கான சம்பவங்களால் உள்ளம் துவண்டிருந்தது. வேதனை நெஞ்சையழுத்த விம்மி விம்மி அழுவதைத் தவிர அப்பொழுது வேறொன்றும் தோன்றவில்லை. ஆனால் அந்தச் சமயத்தில் தந்தைக்கும், தனயனுக்கும் ஏற்பட்ட பேச்சு மட்டும் அவள் காதில் விழுந்திருந்தால் அவள் நெஞ்சு அப்பொழுதே உடைந்திருக்கும்.

லோகநாதன் எப்படியாவது கமலவேணியை முகுந்தனுடன் சேர விடாமல் செய்துவிடுவது என்று திடமான முடிவுக்கு வந்துவிட்டான்.

"அப்பா எதற்கும் கவலைப்படாதீங்க. அந்தப் பயல் இருக்கும் இடத்தை நான் தெரிந்துகொண்டேன். அவன் வேலை செய்யும் இடமும் எனக்குத் தெரிந்துவிட்டது. அவனை மிரட்டிக் கமலவேணியை மறந்து

**க**றுப்பு விதவை என்பது ஒரு வகை சிலந்தி.

**சா**கும் தருவாயில் லால்பகதூர் சாஸ்திரி சொன்ன கடைசி வாக்கியம், 'உதவி உதவி உதவி.... நான் செத்துக் கொண்டிருக்கிறேன்.''

**த**னிமைத்தீவு என அழைக்கப்படுவது டிரிஸ்டன்-டி- நியூவா

**ம**ற்றவனைக் கொன்று விட்டு தானும் தற்கொலை செய்துகொள்வதை மார்டோ சூசைட் என்பர்.

**ஆ**ன்மீக மேதை இராமானுஜர் பிறந்த ஊர் ஸ்ரீபெரும்புதூர்.

**இ**ங்கிலாந்தில் உப்பின் நிறம் பொன்னிறம்.

- முக்கிமலை நஞ்சன்

விடுமாறு கேட்டுக் கொள்ளப் போகிறேன். அது பலிக்காமல் போனால் அவன் வேலை செய்யும் காரியலாயத்திற்குச் சென்று புகார் செய்யப் போகிறேன். அவனுடைய முதலாளி எனக்குப் பரிச்சயமானவர்தான். ஒரே நொடியில் அவன் சீட்டைக் கிழித்து விடுவேன்" என்றான்.

தந்தை சிறிது நேரம் யோசித்தார். "ஏன் போலீசில் புகார் செய்தால்..." புதிய எண்ணம் அவர் மணத்தில் புகுந்தது.

லோகநாதன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். "என்னவென்று புகார் செய்வது? "என் மகளை முகுந்தன் காதலிக்கிறான். அதைத் தடுங்கள் என்றா? காலம் முன்போல் இல்லை அப்பா. கமலவேணியும் குழந்தையில்லை. அவனை மிரட்டி அவளை அதட்டிப் பிரித்துக் காரியத்தைச் சாதிக்க வேண்டும்."

தாய்க்கு வருத்தத்தால் தொண்டையடைத்தது. "இந்தக் கேலிக் கூத்தெல்லாம் வெளியில் தெரிந்தால் நாளைக்கு யார்தான் கமலத்தை மணக்க வருவார்கள். இதற்கெல்லாம் முடிவே கிடையாதா?" அவள் அழுதேவிட்டாள்.

அன்றைய – இராப்பொழுது அந்த வீட்டினரின் உள்ளம் குமுறலும், கோபமும், விம்மலும், வேதனையும் நிறைந்து கழிந்தது.

கமலம் திடமான முடிவுக்கு வந்துவிட்டாள், நாளை மறுநாள் அந்த ஊர் எல்லையைத் தாண்டிவிடுவது என்று. அதை நினைக்கும் போது ஒரு கணம் இன்பமும் – மறுகணம் திகிலும் ஏற்பட்டன.

# 5

மேகவர்ணம் மருந்துக் கடையின் அலுவலகம் அப்பொழுதுதான் திறக்கப்பட்டது. லோகநாதன் அந்தக் கடைக்குள் வேகமாக நுழைந்தான். முதலாளி மேஜை ஒதுக்குப்புறமாக போடப்பட்டிருந்தது. அதற்கு எதிரே இரண்டே நாற்காலிகள். சிறிது தள்ளிக் கண்ணாடிக் கதவு போடப்பட்ட இரண்டு 'ஷோ' கேஸ்கள். அதற்குப் பின்னால் உயரமான கண்ணாடிப் பீரோக்கள். இடையிலே ஓர் ஆள் போய் வருவதற்கான இடைவெளி மட்டும். அந்தக் காலை வேளையில் கூட சுறுசுறுப்பாக வியாபாரம் தொடங்கியிருந்தது. அந்தக் கம்பெனியில்தான் முகுந்தனுக்கு குமாஸ்தா வேலை. தேவையான மருந்துகள் வாங்கி வருவது, பாங்கியிலிருந்து பணம் வாங்கி வருவது, கட்டுவது எல்லாம் அவனுடைய பொறுப்புத்தான். அதனால் அவனுக்கு வெளியே செல்வதற்கு அதிகம் வாய்ப்பு ஏற்பட்டது. அந்தச் சமயத்தில்தான் கமலவேணி அவன் இதயத்துள் புகுந்தாள்.

நான்கு விழிகளிலும் பார்வை ரேகை பாய்ந்து இரண்டு இதயங்களையும் ஊடுருவும்போது அதற்கு சாதி வித்தியாசம் தெரிவதில்லை. பெற்றோர்களின் கட்டுப்பாடு தெரிவதில்லை. நாளை வரும் சங்கடங்கள் தெரிவதில்லை. உணர்ச்சிவசப்பட்ட இன்பத்தில் தோய்ந்தெடுத்த இதயத்தைத் தொடும் சாந்த அக்னியான அந்த ரேகைகள் தங்கள் இயற்கைத் தொழிலை இரண்டு இதயங்களிலும் செய்துகொண்டிருந்தன. அதன் விளைவால் முகுந்தன் கமலவேணியின் நட்பு பலப்பட்டு விரைவிலேயே கடவுள் சந்நிதியில் திருமணத்தை நடத்திக் கொள்ளுமளவுக்கு வளர்ந்து விட்டது. இணைந்த இரு உள்ளங்களைப் புரிந்து கொள்ளாத லோகநாதன் காதல் தேருக்கு முட்டுக்கட்டை போட விரும்பினான். முட்டுக்கட்டை மட்டுமன்று. முறியடிக்கவே திட்டமிட்டான். தங்கைக்கு ஏதோ நல்லது செய்யப் போவதாக எண்ணி, அதை இடையூறு செய்யப் புகுந்தான். அவன் கண்ணுக்குப் புலப்படாமல் விளைவு அவனெதிரே விரிந்து கிடந்தது.

லோகநாதன் அந்த மருந்துக் கடைக்குள் நுழைந்தவுடனேயே, நேரே முதலாளியின் மேஜையருகே சென்றான். முதலாளி டெலிபோனில் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். முகஜாடை மூலமாக லோகநாதனை வரவேற்றார். பேச்சு முடிந்ததும் போனைக்

31-ம் பக்கத் தொடர்ச்சி

தொடர்ச்சி 34-ம் பக்கம் கீழே வைத்துவிட்டுப் புன்முறுவல் பூத்து, "என்னப்பா, லோகநாதா இந்தப் பக்கம் வருவதே இல்லை. தயவே இல்லை" என்றார்.

லோகநாதன் ஒரு பிரபல மருந்துக் கம்பெனியில் வேலையாயிருந்ததனால் சில சமயங்களில் அவன் தயவு அவருக்குத் தேவையாக இருந்தது. அத்தியாவசியமான மருந்துக்கு அதிக கிராக்கி இருந்த காலத்தில் லோகநாதன் மேகவர்ணம் கம்பெனிக்கு மிகப் பெரிய உதவிகளையெல்லாம் செய்திருக்கிறான்.

லோகநாதன் சிரித்துக் கொண்டே எதிரே நாற்காலியில் அமர்ந்தான். "வராமல் என்ன! வீட்டுத் தொல்லைகள் அதிகமாகிவிட்டன. முன்போல் எங்கே வெளியில் கிளம்ப முடிகிறது? ஆபீசிலும் கடுமையான வேலை."

"உனக்கென்னப்பா குடும்பத் தொல்லை? ஆச்சரியமாக இருக்கிறதே! குழந்தைக்குட்டித் தொல்லையில்லை. தகப்பனாருக்கு பென்ஷன் வருகிறது. தங்கை வேறு சம்பாதிக்கிறாள்" என்று குடும்ப நிலவரத்தை முழுதும் அறிந்தவர் போல் பேசினார்.

லோகநாதன் உற்சாகமற்ற குரலில் "அதற்கொன்றும் குறைவில்லை. நிம்மதியாக நாம் வாழ விரும்பினாலும் வெளியிலுள்ளவர்கள் வாழவிடுவதில்லை" என்றான், முகுந்தனைப் பற்றிய பேச்சை எடுப்பதற்குப் பூர்வாங்கமாக.

"நம் நாட்டில் வெளியாட்கள் தலையீடுதான் ரொம்ப அதிகம். தங்கள் குடும்பத்தின் மீது அவ்வளவு சிரத்தை கொள்ளாமல் பிறர் குடும்பத்தில் கடுகு வெடிப்பதைக் கூடக் கவனிக்கிறார்கள்" என்றார் முதலாளி.

லோகநாதன் தன் பேச்சைச் சட்டென ஆரம்பிக்க விரும்பி, "ஸார், உங்களிடம் மிகவும் முக்கியமான ஒரு சமாசாரம் பேச வந்தேன். இங்கே பேசலாமா?" என்று மேஜை மீது சற்றுச் சாய்ந்து அவர் காதினருகே மட்டும் கேட்கும் வகையில் சொன்னான்.

"பேஷாகச் சொல்லுங்கள் லோகநாதன். இங்கு யாரும் வரமாட்டார்கள். காது கொடுத்துப் பேச்சைக் கேட்கவும் மாட்டார்கள்" என்றார். அவரும் மேஜை மீது சாய்ந்து கொண்டு மிகவும் மெல்லிய குரலில், அதே சமயம் அவர் கை மேஜை மீதிருந்த மணியைத் தட்டியது. ஆபீஸ் பையன் வந்தான். பணத்தை அவனிடம் வீசி, "ஸைக்கிளில் பிளாஸ்க் எடுத்துக்

கொண்டு அமிர்தபவனுக்குப் போய் ஸ்பெஷல் காபி இரண்டு வாங்கி வா ஜல்தி" என்றார்.

"பேச்சைக் காது கொடுத்துக் கேட்கக்கூடிய ஒரே ஒரு நபரும் அங்கிருந்துப் போய்விட்ட தைரியத்தில் லோகநாதன் தைரியமாக முகுந்தனைப் பற்றிய விஷயங்களைக் கூறினான்.

முன்பே முகுந்தன் மீது அதிருப்தி அடைந்திருந்த முதலாளியின் மனத்தில் ஒரு எண்ணம் விழுந்து விட்டது.

மணியடித்து அக்கௌண்டெண்டைக் கூப்பிட்டு, "முகுந்தன் வந்துவிட்டானா?" என்று வினவினார். 'இன்னும் வரவில்லை' என்று பதில் அளித்தார். "தினமும் எப்பொழுது வருகிறான்?" என்று முதலாளியின் கேள்விக்கு அக்கௌண்டெண்ட் பதில் சொல்வதற்காகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அக்கம் பக்கம் பார்த்துப் பேசுபவர்போல் தலையை இங்கும் அங்கும் அசைத்து,"வரவர முகுந்தன் வேலையை ஒழுங்காகச் செய்வதில்லை. பதினொரு மணிக்குத்தான் வருகிறான். ஏதாவது கேட்டால் அந்த மருந்துக் கடைக்குப் போனேன். இந்த மருந்துக் கடைக்குப் போனேன் என்று சால்ஜாப்பு கூறுகிறான். அத்துடன்கூட இன்னொரு சமாசாரம் ஸார்..." என்று காதோடு ரகசியம் கூறும் முறையில், "நாளைக்கு அவனுக்குக் கலியாணமாமே. திருநீர்மலைக் கோயிலில் போய் செய்துகொள்ளப் போகிறானாம். அவனுக்குத்தான் ஒரு ஜமா சிநேகிதர்கள் கூட்டம் இருக்கே, புரட்சி புதுமை என்றெல்லாம் பேசிக்கொண்டு...." என்று அவர் கூறி முடிப்பதற்குள் லோகநாதன் துள்ளி எழுந்தான். முதலாளி அவன் கையை அமர்த்தி, "லோகநாதன், இதற்கெல்லாம் நீங்கள் பதறக்கூடாது. அமைதியாக இந்தச் சிக்கலைத் தீர்க்கவேண்டும். நான் சொல்லுகிறபடி செய்யுங்கள்" என்று லோகநாதனை உள்ளே கிடங்குப் பக்கமாக அழைத்துச் சென்றார்.

## முதன் முதலில்

**த**மிழ் மொழியில் கவிதை நாடகத்தை முதன் முதலில் அரங்கேற்றியவர் சகஸ்ரநாமம் அவர்கள்தான்

**பா**ரதியாரின் பாஞ்சாலி சபதம் என்ற கவிதைத் தொகுதி தான் முதன் முதலில் கவிதை வடிவிலிருந்து நாடகமாக்கப்பட்டது

- முக்கிமலை நஞ்சன்

## முதல் டிரைவ் இன் சினிமா தியேட்டர்

**கா**ரிலிருந்தபடியே திரைப்படம் பார்க்கும்படியான முதல் டிரைவ் இன் சினிமா தியேட்டர் 6-6-1933 அன்று நியூஜெர்சியில் காம்டென் என்னுமிடத்தில் கட்டப்பட்டது. 400 கார்களை நிறுத்தி அவற்றிலிருந்து கொண்டே அங்கு திரைப்படம் பார்க்கலாம்.

- முக்கிமலை நஞ்சன்

அவர் யோசனையைக் கேட்டு வெளியே வரும்போது, லோகநாதன் தெளிவு பெற்றவன் போல் காணப்பட்டாலும் அகத்திலே வேதனையும், செய்யப்போகும் காரியத்தின் பயங்கரத் தன்மையும் கலந்திருந்தன.

## 6

**ம**றுநாள் காலை அன்று கதிரவன் காய்வதில்கூட தனி விசேஷம் இருப்பதாக முகுந்தன் எண்ணினான். முகுந்தன் தன் நண்பனுடன் வாடகை மோட்டாரில் பூங்கா அருகே காத்திருந்தான். கமலவேணி வழக்கம்போல் பள்ளிக்கூடம் போகும் பாவனையில் அங்கு வந்துவிடுவதாகவும் உடனே நேரே காரில் திருநீர்மலையை நோக்கி விரைவதென்றும், அங்கே முன்னதாகவே சென்றிருக்கும் நண்பன் கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிடுவானென்றும் ஏற்பாடாகியிருந்தது. ஒரு பையில் கலியாண வேஷ்டி, புடவை, இரண்டு மலர்மாலை – யாவும் மோட்டாரில் இருந்தன.

கமலவேணிக்குக் காலையில் எழுந்திருக்கும்போதே ஒருவித பரபரப்பு. அந்தப் பேதை தான் எண்ணுவது போன்றெல்லாம் உலகில் எல்லாம் நடந்துவிடும் என்று எண்ணினாள். உடலில் ஒருவித இன்பமும் பயமும் கலந்து சிலிர்ப்பு. நெற்றியில் திலகம் அணியும் போது கைநடுங்கியது. கூடத்து அறையை விட்டு வெளியே வரும்போது தாய் எதிர்ப்பட்டாள். அவள் முகத்தை நோக்கக்கூட கமலவேணிக்குக் கஷ்டமாக இருந்தது. 'பெற்றெடுத்து இருபது வருடங்களாக வளர்த்த தாயின் அன்பையும் மீறி ஒரு கணத்தில் சந்தித்த ஒருவரிடத்தில் மனத்தை ஒப்படைத்துப் பெரும் பெரும் காரியங்களைச் செய்யத் துணிகிறோமே' என எண்ணும்போது தன்னையறியாது அவள் கண்களில் நீர் ததும்பியது.

அம்மா என்று வாய்விட்டு விம்மி அலறவேண்டும் போலிருந்தது. தாயையும் அழைத்துக்கொண்டு போய் அவள் ஆசியுடன் மணந்துகொண்டால் என்ன என்றும் எண்ணினாள்.

அண்ணன் லோகநாதனைக் காலையிருந்தே காணவில்லை. தான் செய்யப்போகும் காரியத்தை அவன் அறிந்தால்... அதை நினைக்கும்போதே அவள் உடல் சிலிர்த்தது. தாய்க்கும், தந்தைக்கும் இல்லா அக்கறை, அவனுக்கு மட்டுமென்ன? வீணாக என் வாழ்வில் குறுக்கிட்டு வேதனை கொடுக்கிறானே என நினைத்தாள்.

கூடத்தில் மாட்டியிருந்த கெடிகாரத்தில் சின்ன முள் நிற்குமிடத்தை நோக்கிப் பெரிய முள் விரைந்து கொண்டிருந்தது. பெரிய முள் நகர நகரச் சின்ன முள் கண்ணுக்குச் சட்டெனப் புலப்படா வகையில் நகர்ந்து கொண்டிருந்தது. அவளை அறியாமலேயே அவள் மனம் வீட்டின் காம்பவுண்டுச் சுவரைக் கடந்து, தெருவைக் கடந்து, முக்கிய வீதிகளைக் கடந்து குறிப்பிட்ட இடத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. முகுந்தன் வந்திருப்பான். வந்திருந்தால் வாழ்விலேயே பெரும் திருப்பத்துக்கு அந்த வினாடி வழி வகுத்துவிடும். வந்திராவிடில்....

வந்திராவிடில் என்ன? உனக்கு நல்லதுதானே கமலம், அவனை மறந்துவிடலாம். கோழைத் தன்மையுடன் கூடிய அவன் இதயத்தை அந்த நொடியில் மதிப்பிட்டு விட்டு காதலுக்கும் – காதல் நினைவுக்கும் ஒரு முழுக்குப் போட்டு விடலாம் – உள்ளத்தில் ஒரு பகுதியின் குரல்.

அது எப்படி முடியும்? வராமல் அவர் இருக்கமாட்டார். கதை, சினிமா இவற்றைப் பார்த்துவிட்டு எழுந்த காதலன்று அவருடைய காதல்; களங்கமற்ற அவர் பேச்சு, அவர் அகத்தைத் தெரிவிக்கும் முகம் எல்லாம். என்றும் ஏமாற்றத்தை அளிக்காது என்பதைத் தெரிவிக்கின்றன. கோழைத்தனம் என்பதே அவருடைய அகராதியில் இல்லை.

அதை எப்படி கண்டு கொண்டாள் கமலம்? ஆண் வர்க்கத்துக்குப் பசப்பு வார்த்தைகளையும், பெரும் பெரும் வாக்குறுதிகளையும் அளிப்பதில் தான் சலிப்பு அதிகம். உன் காதலன் அதிலிருந்து எப்படி மாறுபட்டவர்?

“ஓ! நிச்சயமாகக் கூற முடியும். காதலில் அவர் என் உடலையும், உடலைச் சுற்றிய வண்ணச் சிங்காரத்தையும் உடல் வனப்பையும் பெரிதாகக் கொள்ளவில்லை. என் உள்ளத்தைத் தான் விரும்பினார். அது உனக்கே தெரியுமே! என்னை ஏன் சோதிக்கிறாய்? அவரது அழகுக்கு

**காலச்சரம்**

காலச்சாரம் இன்னும்
மணம் வீசியபடியே
இருக்கின்றன!

கைகளின் அகப்படலில்
இன்னும்
காட்சியாகவே!

கனவுத் தோட்டம்
முழுமையிலும்
மலர்களாகவே
இருக்கின்றன!

கற்பனையின்
நிறங்களைப்போல
மாறியபடியே!

நிற மணங்கள்
ஒன்றினின்றும்
மற்றதாகவும்

மற்றதில்
ஒன்றெனவாகவும்...
பிரிகையுடனே
விரிகிறது.

- தமிழ்நாயகி, சேலம்

அவர் உடல் உணர்ச்சி ஒன்றையே முக்கியமாகக் கருதுவதனால் வேறு அழகுள்ள பெண்களை நாடியிருக்கலாம். என்னை அவர் தேர்ந்தெடுத்திருக்க வேண்டியதில்லையே...

உள்ளத்தின் போராட்டம் நீடிக்கக் கடிகாரத்தின் பெரியமுள் விடவில்லை. உரிய நேரம் நெருங்கியது. கமலம் உண் கலம் முன் உட்கார்ந்தாள். குனிந்த தலையுடனே சாப்பிட்டாள். முகூர்த்தத்திற்குப் பின் சாப்பாடல்ல முன்பே தான்; விரைவில் முடித்துக் கொண்டு அவள் தாயை ஒரு முறை பார்த்தாள். தாய் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். கமலம் திரும்பி நின்றாள்.

"பள்ளிக்கூடம் விட்டவுடன் நேரே வீட்டிற்கு வந்து விடு கமலம்."

தாயின் இந்தச் சொற்கள் அவள் உள்ளத்தில் புகுந்துக் கலங்க வைத்தன. அவள் இப்போது போவது உடனே திரும்பி வரவா? தாயின் பாதங்களில் வீழ்ந்து கதற வேண்டும்போல் தோன்றியது. கைகுட்டையை நழுவ விட்டு எடுப்பதுபோல் குனிந்து, தாயின் பாதத்தூளி பட்ட இடத்தை ஒத்திக் கொண்டு சரேலென அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

மணி டண் டண் என்று ஒன்பது அடித்தது! டாக்ஸியின் அருகில், கமலவேணி வரும் திக்கை நோக்கிக் காத்திருந்தான் முகுந்தன். அவன் நண்பனும், கை கடிகாரத்தைப் பார்த்தாலேயே அவன் பரபரப்பு புரிந்தது.

இதோ கமலவேணி வந்துவிட்டாள். அவள் முகத்தில் புன்னகை. சிவப்பு நிறப் புடவையை அணிந்திருந்தாள். நீலநிற ரவிக்கை, கூந்தலில் ஒரே ஒரு கொத்து மல்லிகை. நெற்றியில் வியர்வைத் துளிகள்.

"ஒரு வினாடி தாமதமாயிருந்தால்

கூட நான் என்னென்னவோ எண்ணியிருப்பேன்" என்றான் முகுந்தன், ஏதோ பெரும் பாரம் இறக்கியவன் போல்.

கமலவேணி பதில் பேசாது காரில் ஏறிக் கொண்டாள். முன் ஸீட்டில் கமலவேணியும், முகுந்தனும் அமர்ந்தனர். கார் கிளம்பியது. வேகமாகச் சென்றது.

வளைந்த பாதையில் டாக்ஸி திரும்பும்போது, கமலவேணி முகுந்தன் மீது சாய நேரிடும். அப்போது வெட்கமும் கூச்சமும் கலந்த முறையில் அவள் சட்டென ஒதுங்கிக் கொள்வாள். வெட்கம் கலந்த புன்னகை உதயமாகும்.

சைதாப்பேட்டைப் பாலத்தைக் கடந்து, கிண்டி ஸ்டேஷனைக் கடந்து கத்திப்பாராவைக் கடந்து கார் மலைச் சாலையில் ஓடிக் கொண்டிருந்தது. இரண்டு பக்கங்களிலும் வேகமாக ஓடும் மரங்கள், வீடுகள் வயல்கள், ஏதும் அவள் கவனத்தைக் கவரவில்லை. எவ்வித சிந்தனையுமில்லாது நிஷ்களங்கமாக இருந்தது அவளது உள்ளம். புயலுக்கு முன் அமைதி என்பார்களே அதுதானே?

பரங்கி மலையைத் தாண்டியவுடன் அந்தச் சாலையில் சந்தடியே இல்லை. எதிரே ஓரிரு லாரிகள் 'வீர் வீர்' என்ற சப்தத்துடன் போகும்.

முகுந்தன் பெரும் சிந்தனையிலாழ்ந்திருந்தான். ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை. அந்தச் சமயம்...

தொலைவில் ஒரு கார் நிற்பதையும் யாரோ சிலர் இறங்கி நிற்பதையும் டாக்ஸி டிரைவர் கண்டான். இந்த மாதிரியான காரியங்களில் எல்லாம் பழக்கப்பட்ட அவனுக்குச் சந்தேகம் தோன்றியது.

"ஸார்; அதோ யாரோ நிற்கிறார்கள்" என்றான். முகுந்தனும் பார்த்தான். "யாராயிருந்தால் என்ன ஓட்டு" என்றான். டாக்ஸி அந்தக் காரை நெருங்குவதற்குள் சாலையை மறைத்துக் கொண்டு நான்கைந்து பேர் நின்றனர்.

டாக்ஸி நிறுத்தப்பட்டது. டாக்ஸி டிரைவர் இறங்கினான். முகுந்தனும் இறங்கினான். பின்னாலிருந்த முரடனான ஓர் ஆள் ஓர் குத்துவிட்டான். முகுந்தன் சுருண்டு விழுந்தான். டாக்ஸி டிரைவர் இதைக் கண்டு பயந்து தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓரே ஓட்டம் பிடித்தான்; முகுந்தனின் நண்பனின் வாயில் துணியடைக்கப்பட்டது.

கமலவேணி நடப்பது ஒன்றும் புரியாமல் காரிலிருந்து இறங்கலாமா

## நிறங்களின் தன்மை

சிவப்பு நிறம் கோபத்தை உண்டுபண்ணுகிறது.
ஆரஞ்சு நிறம் மகிழ்ச்சியையும் மன அமைதியையும் தருகிறது.
நீல நிறம் நோய்களை குணமாக்குகிறது.
பளபளப்பான மஞ்சள் நிறம் சோம்பலை உண்டு பண்ணுகிறது

- முக்கிமலை நஞ்சன்

வேண்டாமா என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது, எதிரேயிருந்த காரிலிருந்து லோகநாதன் இறங்கி வந்து பயங்கரமான குரலில், "உம் இறங்கு" என்று கர்ஜித்தான்.

கமலவேணி திடுக்கிட்டாள்: திகைத்தாள். லோகநாதன் சொல்படி செய்தாள். காரில் ஏறினாள்.

கார் கமலவேணியை மட்டும் ஏற்றிக் கொண்டு வந்த வழியே பறந்தது.

முகுந்தன் மயக்கம் தெளிந்து விழித்தபோது அவனை முரட்டுத்தனமாக அடித்தவர்களும், வழி மறித்தவர்களும் அவனை இழுத்து டாக்ஸியில் உட்கார வைத்துவிட்டு ஒரு விநாடியில் எங்கோ ஓட்டம் பிடித்தனர்.

அந்த வெயில் வேளையில், மயக்கமுற்றிருந்த முகுந்தனுடன் டாக்ஸியும் அனாதையாக சாலையில் நின்று கொண்டிருந்தது.

## 7

கமலவேணிக்கு ஒன்றும் புரியவில்லை. துப்பறியும் கதைகள் படித்திருக்கிறாள். ஆங்கிலச் சினிமா ஓரிரண்டு பார்த்திருக்கிறாள். சரித்திரப் புராணக் கதைகளைக் கேட்டிருக்கிறாள். இதுபோல் பெண்ணைத் தூக்கிச் செல்லும் சாகஸச் செயல்கள் படிக்க ருசிகரமாகவும் பயங்கரமாகவும் இருக்கும். அவை, தன் வாழ்விலேயே நடந்து விட்டனவே.

"பெண்ணாகப் பிறந்தாலே மிகப்பீழை இருக்குதடி தங்கமே தங்கம்" என்ற பாரதியார் பாடல் அவளுக்கு ஞாபகத்திற்கு வந்தது. பெண்ணாகப் பிறந்தவர்களுக்கு எல்லாம் துன்பம் நேர்ந்து விடுகிறதா. உலகில் விரும்பிய மணாளனை மணந்து மனமொத்து வாழ்கிறவர்கள்

இல்லையா? பெற்றோர் பார்த்து முடிவு செய்தவனை மணந்து சிறப்பாக வாழ்க்கை நடந்துபவரில்லையா? தனக்கு இரண்டுமே இல்லாமல் போய்விட்டனவே!

தன் திருமணத்தைப் பற்றிப் பெற்றோர்கள் ஏதும் நினைக்கவேயில்லை. பொதுவாகச் சில பெற்றோர்கள் தங்கள் பெண்களைக் குழந்தை குழந்தையென்று தலையில் வைத்துக் கூத்தாடி, குழந்தை சுய ரூபம் எடுத்தவுடன் அவசர அவசரமாகக் கலியாணத்துக்கு வரனை நிச்சயிக்கிறார்கள். தன் விஷயத்திலோ அண்ணன் லோகநாதனின் பிடிவாதம்தான் மிக அதிகம். என் விஷயத்தில் அவன் ஏன் தலையிட வேண்டும். அவனுடைய மைத்துனனை நான் மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவா புனிதமான காதலை முறிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்...? இப்படிப் பல பல எண்ணினாள்.

கார் சந்தடியின்றி வீட்டு வாசல் முன்பாக வந்து நின்றது. மணி டண் டண் என்று பத்து அடித்து ஓய்ந்தது. போன சீக்கிரமும் வந்த சீக்கிரமும், அவளுக்கு அவமானமும் வெட்கமும் கலந்து வாட்ட, அழுகைக் குமுறிக் கொண்டு வந்தது. காரிலிருந்து இறங்கி உள்ளே ஓடிச் சென்று சிறு குழந்தைபோல் விம்மி விம்மி யழுதாள்.

விபரம் ஒன்றும் புரியாத தாயும், தந்தையும் ஓடோடி வந்தனர். வாசலில் கார் நிற்பதையும், காரிலிருந்து லோகநாதன் இறங்கி வருவதையும், காரில் இன்னும் ஓரிரு தடியர்கள் இருப்பதையும் காண அவர்களுக்குத் திகைப்பு சொல்லி முடியவில்லை.

"கமலம், கமலம், என்ன நேர்ந்தது. ஏன் அழுகிறாய். டேய் லோகநாதா இவளை எங்கே பார்த்தாய்..." என்று தாய் வினவவும், கமலத்துக்கு

**நே**தாஜியின் பிறந்தநாள் தேசபக்தி நாளாகக் கொண்டாடப்படுகிறது.

**சு**வாமி விவேகானந்தரின் பிறந்தநாள் உலக இளைஞர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

**உ**லகம் முழுவதும் மிகவும் அதிக அளவில் பயன்படுத்தப்படும் காய்கறி வெங்காயம்.

- முக்கிமலை நஞ்சன்

இன்னும் அழுகை பொங்கி வந்தது. தாய்க்கும், தந்தைக்கும் தெரியாமல் அண்ணன் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறானே என்று, தாயின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு "அம்மா" என்று விறிட்டாள்.

"அம்மாவாம், அம்மா! இவள் செய்திருக்கிற காரியத்திற்கு இவளை இங்கேயே வெட்டித் தீர்த்துவிடலாம்" என்று லோகநாதன் கர்ஜித்தான்.

தாய் லோகநாதன் பக்கம் திரும்பி, "டேய் ரொம்பவும் அதட்டி, ஆட்சி நடத்தாதே. என்ன நடந்தது?" என்று குரலை உயர்த்திக் கேட்டாள்.

"என்ன நடந்ததா? குழந்தை குழந்தை என்று நீ தொட்டிலில் போட்டுத் தாலாட்டும் உன் அருமை மகள் இன்று கலியாணம் செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்துவிட்டாள். நான் குறுக்கிடாதிருந்தால், இத்தனை நேரம் ஜாம் ஜாம் என்று மஞ்சள் கயிறு அவள் கழுத்தில் ஏறியிருக்கும்..."

"அடிப்பாவி"– தாய் கூவினாள்.

"என்னடா, என்னடா, என்னடா, கலியாணமா? கமலத்துக்கா?' ஐயையோ?" – தந்தை கூவினார்.

"ஆமாம், அமாம். முகுந்தன் எனும் அந்த அயோக்யப் பயலும் இவளுமாக டாக்ஸியில் போய்க் கொண்டிருந்தனர். நான் தடுத்து நிறுத்தி யிராவிடில் நாம் காலா காலத்திற்கு ஒன்றுமே செய்ய முடியாமல் போயிருக்கும். வேறு ஜாதிப் பையன் உனக்கு மாப்பிள்ளையாக வந்திருப்பான்..."

லோகநாதன் முடிக்கவில்லை. கமலவேணி துள்ளி எழுந்தாள். ஆக்ரோஷமும், அவமானமும், ஆத்திரமும் அழுகையும் பொங்கிவர, "போதும் நிறுத்து! அயோக்கியப் பயல் என்று அவரைச் சொல்லாதே. நீதான் அயோக்கியன். நான் எப்படிப் போனால் உனக்கென்னடா! என்னதான் தடுத்தாலும் நான் அவரைத்தான் மணப்பேன்" என்று கர்ஜித்தாள். அவளது துடிப்பான குரலையும், ஆவேசத்தையும் கண்டு ஒரு கணம் லோகநாதன் அஞ்சிவிட்டான்.

நிலைமையை மாற்றத் தாயின் குரல் பெரிதும் உதவி செய்தது.

"கமலம்?" என்று தாய் பேச்சை ஆரம்பித்தாள். "ரொம்பவும் கெட்டிக்காரி நல்லவள் என்று உன்னை இரு வரை நான்

எண்ணியிருந்தேன். நீ இப்படிக் குடும்பத்துக்கு அவப் பெயரை வரவழைப்பாய் என்பது தெரியாது. இந்த குடும்பத்தின் தலைமுறையிலேயே இதுபோல் நேர்ந்ததில்லை. எனக்குப் பன்னிரண்டு வயதிலேயே கல்யாணம். அப்பா அம்மா பார்த்துச் செய்துவைத்தவரை மணந்து நல்லபடியாகத்தான் இதுவரைக் காலங் கழித்துவிட்டேன். என் கடைசி மூச்சை அமைதியாக ஒடுங்கும்படி செய்யம்மா! ஜாதிவிட்டு ஜாதி கலியாணம் செய்துகொள்ள எப்படி உன் மனம் துணிந்தது கமலம்?"– தாய் கண்ணில் நீர் மல்கக் கேட்டாள்.

தாய் விட்டதைத் தந்தை தொடங்கினார், "என் பெயரைச் சொன்னால் கௌரவமான குடும்பம் என்று இதுவரையில் எல்லாரும் புகழ்ந்து வந்தனர். அதற்கு மாசு ஏற்படும்படி செய்துவிட்டால், கால காலத்திற்கு எல்லோரும் சொல்லிச் சொல்லிச் சிரிப்பார்கள். சுப்ரமண்யத்திற்கு மகள் ஒருத்தி இருந்தாள்; அவள் சாதிவிட்டு ஒருத்தனுடன் ஓடிப்போய்விட்டாள் என்று அந்த அவப் பெயர் அழியாதிருக்கும்."

தந்தைப் பேச்சைத் தொடர்ந்தபோதும் கமலம் குறுக்கிட்டாள். ஓடிப் போய்விட்டாள் என்ற சொல் அவள் இதயத்தைப் பிழிந்தது. "அப்பா..." என்று கூவினாள்.. "அப்பா, நான் ஓடிப்போகவில்லையப்பா... எனக்கு அவரைப் பிடித்தது; அவருக்கு என்னைப் பிடித்தது. இரண்டு பேரும்

**நெஞ்சத்தவம்**

திருநாள் கோலமாய்
ஒரே ஒருமுறை இருந்தது
மனம்;
உன்னைப் பார்த்தபோது!
நிசப்தம்
மீண்டும் வந்தது!

வரும் நாட்களின்
விழாவிற்காய்
தவமிருக்கிறது
வெறும் நெஞ்சம்!

வாஞ்சையின் வருடல்களாய்
தடவிக் கொடுக்கிறது
எதிர்பார்ப்பு
வலிக்கவே இல்லாத
வலிகளைத் தாங்குவதிலும்...

நீயே...
இலக்காக இருக்கிறாய்!

ஆகவே,
திருநாள் கோலமாய்
ஒரே ஒருமுறை இருந்தது
மனம்
உன்னைப் பார்த்தபோது...

- தமிழ்நாயகி, சேலம்

**பா**ர்லிமலர் 3 நிமிடங்கள் மட்டும் மலர்ந்திருக்கும்.

**மி**கவும் இளம் வயதில் நோபல் பரிசு பெற்றவர் சர் வில்லியம் பிராக் – 25– வயதில்.

**கே.**பி. சுந்தராம்பாள் பிறந்த ஊர் கொடுமுடி.

**ஐ**ரோப்பாவின் மக்கள் நெருக்கம் மிகுந்த நாடு பெல்ஜியம்.

**சீ**ன மேதை மா–சே–துங் தன் வாழ்நாளில் ஒரு முறை கூட பல் துலக்கியதில்லையாம்!

சம்மதித்து மணக்கத் தீர்மானித்தோம். என் வாழ்வில் ஏனப்பா அண்ணன் குறுக்கிட்டு என்னைச் சித்ரவதை செய்கிறான், என்னை விட்டு விடுங்கள் அப்பா. ஊர் உலகத்தின் பேச்சிற்காகக் கவலைப்படாதீர்கள் அப்பா. ஊர் உலகம் என்பது முதுகெலும்பு இல்லாததப்பா. தலைமுதல், கால் வரை உடலெங்கும் அதற்கு வாய் ஒன்றுதான் இருக்கிறது. பேசும், பேசும், பேசிக் கொண்டேயிருக்கும். ஒரு துரும்பைக்கூட எடுத்து மறு இடத்தில் போட்டு நல்லதைச் செய்ய முடியாத பச்சோந்தி உலகம். சாதி சாதி என்று இன்னும் நீங்கள் இருபதாம் நூற்றாண்டிலும் பேசுவது போன்ற புதுமை வேறு உண்டா... என்னை விட்டுவிடுங்கள். நான் முடிவு செய்துவிட்டேனப்பா. இத்தனை நேரம் அவர் நடுரோடில் மண்டையிலடிபட்டு வீழ்ந்துகிடப்பார்.. ஒருவேளை அவர் உயிர் போயிருந்தால்... ஐயோ நினைக்கவும் முடியவில்லையே! நான் போகிறேன் நான் போகிறேன்..." என்று அழுதவாறு கூறி எழுந்துபோக முயன்ற கமலத்தை, லோகநாதனின் இரும்புக் கரங்கள் பிடித்துத் தள்ளின. அப்பொழுது வெளியேயிருந்து ஒரு குரல், "இது தான் லோகநாதன் வீடா" என்று கேட்டது.

லோகநாதன் எட்டிப் பார்த்தான். போலீஸ்காரர் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

போலீசைப் பார்த்தவுடன் லோகநாதனுக்குத் 'திக்'கென்றது. தாயிடமும், தந்தையிடமும் மெல்லிய குரலில் 'கொஞ்சம் அமைதியாக இருங்கள், போலீஸ் வந்திருக்கிறது'' என்று கூறிவிட்டு, வாசலுக்கு வந்தான்.

"இதுதானே லோகநாதன் என்பவர் வீடு"– மறுபடியும் போலீஸ்காரர் வினவினார்.

இல்லை என்று சொல்லியிடலாமா என் அவன் ஒரு கணம் எண்ணினான். அது முடியாது என்று தோன்றவே, "ஆம்" என்று மென்று விழுங்கிக்கொண்டே கூறினான்.

"போலீஸ் ஸ்டேஷனிலிருந்து இன்ஸ்பெக்டர் ஐயா கூட்டியாரச் சொன்னாங்க."

"என்னையா...? இருக்காதே."

"உம் பெயர்தானே லோகநாதன்? உங்கள் தங்கை பெயர்தான் கமலம்மாள். அதுபற்றிப் புகார் ஏதோ கிடைத்திருக்கிறது. அரெஸ்ட் வாரெண்ட் போடறதுக்கு முன்னாடி நேரிடையே அழைத்து வந்து பேசித் தீர்க்க இன்ஸ்பெக்டருக்கு எண்ணம். ரொம்ப நல்லவரு அவரு."

"புகாரா... அரெஸ்ட் வாரண்டா? ஒன்றும் புரியவில்லையே, ஏன். எதற்காக...?"

"அதெல்லாம் எனக்கு தெரியாது. ஸ்டேஷனுக்கு வாங்க, கமலம்மாள் இங்கேதான் இருக்காங்களா? அவங்களையும் கூட்டிவரச் சொன்னாங்க..."

லோகநாதன் மௌனமாக நின்றான். தந்தையும் தாயும் நடந்த சம்பாஷணைகளைக் கதவு ஓரமாக இருந்து கேட்டுக் கொண்டு நின்றனர். கமலவேணியின் விம்மலும் அழுகையும் கூட நின்றிருந்தது.

"ஸார் நேரமாகுது... வாரீங்களா."

லோகநாதன் மறுபேச்சு பேசாமல் அவனைப் பின்தொடர்ந்தான். தந்தையும், தாயும், லோகநாதன் மணைவியும் என்னது செய்வதென்று புரியாமல் புலம்பினர்.

**தி**ருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மலர்கள் அனிச்சமலர், குவளை மலர்.

**கோ**மன்சீ எனும் பழங்குடியினர் எருமை இறைச்சியை உண்ணுகிறார்கள்.

**மு**த்துத் தீவு என அழைக்கப்படுவது பஹ்ரைன்.

**க**டவுள் பற்றிய படிப்பு தியோலஜி எனப்படும்.

**ஆ**ண் கொசுவின் ஆயுள் 9 நாட்கள்.

- முக்கிமலை நஞ்சன்

# 8

“மலைச் சாலையில், அடியுண்ட மயக்கத்திலிருந்து விழித்தெழுந்த முகுந்தனும், அவன் நண்பனும் செய்வதறியாது திகைத்தனர். டாக்ஸி டிரைவரையும் காணவில்லை. அருகே பையிலிருந்த புது புடவையைக் காணவில்லை. பையைத் தொட்டுப் பார்த்து கொண்டான். புனிதமான திருமாங்கல்யம் மட்டும் களவு போகாதிருந்தது.

‘கமலம், கமலம்...” அவன் உதடுகள் முணுமுணுத்தன. தன் நண்பனை நோக்கி, “கமலம் எங்கே போயிருப்பாள். அவளை அழைத்து வந்த வரையில் அவளது உடைமைக்கும் அவனது உயிருக்கும் நானல்லவா பொறுப்பாளி” என்று புலம்பினான்.

நண்பன் முகுந்தனைத் தேற்றினான். அவனது ஆறுதல் வார்த்தைகளால் தேறாத முகுந்தன், “நாம் இப்படி இருப்பதில் பயனில்லை. இந்தச் சதி அவள் அண்ணன் லோகநாதனுடையதாயிருக்க வேண்டும். உடனே போலீஸில் போய்ப் புகார் செய்வதுதான் பிரச்னை தீர வழி. குண்டர்களை வைத்துத் தாக்குவதால் என் இதயத்திலிருந்து கமலத்தை அழித்துவிட முடியுமா..” பேசிக்கொண்டே போனான்.

அந்தப் பக்கமாக வந்த பஸ்ஸில் இருவரும் ஏறிக் கொண்டு சென்னையை அடைந்தனர்... போலிஸ் ஸ்டேஷனில் முகுந்தனின் நண்பர்தான் இன்ஸ்பெக்டர். அவரிடம் சென்று முழுச் செய்தியையும் கூறினான்.

“மிகச் சிக்கலான பிரச்னையப்பா இது. பொதுவாக ‘எங்கள் வீட்டுப் பெண்ணைத் தூக்கிப் போய்விட்டான்’ என்று பெற்றோர்கள் தான் புகார் கூறுவார்கள். நீயோ, கலியாண ஏற்பாட்டைச் செய்துவிட்டு மணப்பெண்ணுடன் தாலி கட்டுவதற்காகப் போய்க் கொண்டிருந்தபோது மணப்பெண்ணைத் தூக்கிப் போய்விட்டார்கள் என்கிறாய். இதிலே கவனிக்க வேண்டிய அம்சங்கள் பல இருக்கின்றன. வழக்கு நீதிமன்றத்தில் நடந்தால் ரொம்பவும் சுவையாக இருக்கும். சரி அந்தப் பெண்ணையும் அவள் சகோதரனையும் வரவழைத்து விசாரிக்கிறேன். ஆனால், ஒன்று, என்னால் கலியாணம் செய்து வைக்கும் காரியத்தை மட்டும் ஏற்க முடியாது” என்றார் சிரித்தவாறு. முகுந்தனும் அவன் நண்பனும்

சோர்வுற்று நாற்காலியிலமர்ந்தனர். காலையில் எட்டு மணிக்கு அவர்கள் இருந்த சந்தோஷ நிலை என்ன! இப்போழுது மூன்று மணி நேரங்கள் கழித்து இருக்கும் நிலை என்ன? காலம் ரொம்பப் பொல்லாதது!

லோகநாதன் பின்தொடர கமலவேணி போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தாள், இல்லறம் என்பது பஞ்சணை மெத்தையன்று என்று யாரோ கூறியிருக்கிறார்கள். அந்த இல்லறத்தை நடத்தத் தொடங்கிய முதல் படியிலேயே, 'விபத்தா?' – இதை எண்ணும்போது கமலத்துக்குத் துக்கம் துக்கமாக வந்தது.

கடந்த ஒரு வாரத்திற்குள் எத்தனை விதமான அனுபவம்! பல வருடங்கள் படித்தால்கூட அடைய முடியாத அனுபவம். காதல் என்ற மூன்றெழுத்துச் சொல்லைப் புனிதமானது, இன்ப மயமானது என்றெல்லாம் கூறுகிறார்களே, அந்தக் காதல் படுத்தும் பாடு லேசாக இல்லையே.

ஒருபுறம் காதலன் – வெண்ணெய் திரள்கையில் தாழி உடைந்ததுபோல் கல்யாண வாயிற்படியில் மணமகளைக் காணாது தவித்து நிற்கிறான்.

மறுபுறமோ பெற்றவர்கள் ஓலமிடுகிறார்கள். 'போலீஸ் ஸ்டேஷனிலோ – வேறு எங்கேனும் சரி, 'முகுந்தனைக் காதலிக்கவில்லை, அவரைத் தெரியவே தெரியாது. அவருடன் காரில் போகவில்லை' என்று சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாமல், நடந்ததைக் கூறினால் 'நாங்கள் விஷம் சாப்பிட்டோ தூக்குக் கயிறில் தொங்கியோ மாண்டு விடுவோம் என்று பயமுறுத்தினார்கள். காதல் வேண்டுமா!"– பெற்றோர்களுடைய உயிர் வேண்டுமா?

ஒரு முடிவுக்கு வந்துதான் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்ல வேண்டும்.

கமலவேணி ஒரு கணத்தில் முடிவுக்கு வந்துவிட்டாள். அவளுக்கு இந்த உலகமே வெறுத்துவிட்டது. வைராக்யமும் சபதமும் வெறுப்பும் இந்த உள்ளத்தில் எழுவதற்கு நீண்ட நேரச் சிந்தனை தேவையில்லை. ஓர் அதிர்ச்சி, ஒரு சொல் போதுமே.

இன்ஸ்பெக்டர் எதிரே லோகநாதன் வந்து நின்றான். அவன் பின்னால் குனிந்த தலையுடனும், கலங்கிய கண்களுடனும் கமலவேணி வந்தாள். முகுந்தன் அங்கு உட்கார்ந்திருப்பதைப் பார்த்தவுடனே அவள் திடுக்கிட்டாள்.

## 'டே' கட்டிய கோட்டை

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் காலடி வைத்தவுடன் முதல் முறையாக கட்டிய கோட்டை, சென்னையிலுள்ள புனிதஜார்ஜ் கோட்டையாகும். 1640-ம் ஆண்டு இது கட்டப்பட்டது. கட்டியவரின் பெயர் 'டே'

## மனித உடலில்....

மிக எளிதில் உடையும் எலும்பு கழுத்துப்பட்டை எலும்பு. எளிதில் உடையாத உறுதியான எலும்பு தாடை எலும்பு.

இன்ஸ்பெக்டரின் விசாரணை நடந்தது. லோகநாதன் ஒன்றுமே தெரியாது என்று சாதித்து விட்டான். முகுந்தன் போலீஸ் ஸ்டேஷன் என்பதையும் மறந்து ஆத்திரத்துடன் எழுந்தான்.

''அடப்பாவி ஒன்றுமே தெரியாது என்கிறாயே. நானும் உன் தங்கையும் டாக்ஸியில் சென்றது உனக்குத் தெரியாதா? வழியில் மற்றொரு காரை நிறுத்தி வழி மறித்தாயே, அது உனக்குத் தெரியாதா? என்னையும், என் நண்பனையும் உன் கையாட்கள் மண்டையிலடித்துப் போட்டது உனக்குத் தெரியாதா? எல்லாவற்றிற்கும் மேலாகக் கமலத்தை அங்கிருந்து கவர்ந்து சென்று திருப்பி இதோ அழைத்து வந்திருக்கிறாயே அதுவும் உனக்குத் தெரியாதா..'' முகுந்தன் பேசிக் கொண்டே போனான்.

இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டு, ''நீங்கள் சும்மா இருங்கள், நான் விசாரிக்கிறேன்'' என்று முகுந்தனை அடக்கி கமலவேணியை நோக்கி, "அம்மா இதோ இருக்கிறாரே இவரைத் தெரியுமா?"

இதற்குப் பதில் கூறக் கமலம் முற்படுவதற்குள் லோகநாதன் முந்திக் கொண்டு, "இவன் யாரென்றே என் தங்கைக்குத் தெரியாது என்று முன்னமே சொன்னேனே'' என்றான். இன்ஸ்பெக்டர் கடுமையான குரலில், "மிஸ்டர், உம்மைக் கேட்கும்போது பேசலாம். இப்போழுது நீர் குறுக்கிடத் தேவையில்லை'' என்று அதட்டி விட்டு மறுபடியும் கமலவேணியை நோக்கி அதே கேள்வியைக் கேட்டார்.

கமலவேணி பதில் சொன்னாள்:

"அவரை எனக்குத் தெரியும்."

கமலம் தலையை அசைத்தாள் 'ஆம்' என்பதற்கு, அறிகுறியாக.

“இன்று காலையில் நீங்களும் முகுந்தனும் திருநீர்மலையில் கல்யாணம் செய்துகொள்ளக் காரில் போனீர்களா?”

கமலம் மௌனமாக நின்றாள். இங்குத்தான் உயிர்ப் பிரச்சனை ஊசலாடுகிறது. லோகநாதன் எரித்து விடுபவன் போல் அவளையே நோக்கிக் கொண்டிருந்தான். அவள் எதிரே பெற்றோர்கள் தூக்கிலாடும் தோற்றம் தெரிந்தது.

கண்களிலிருந்து நீர் பொலபொலவென உதிரக் கூறினாள்: “இல்லை”_

முகுந்தனும் அவன் நண்பனும் சீறி எழுந்தனர். “இல்லையா! கமலம் நீயா கூறுகிறாய்? உன்னை அப்படிச் சொல்லுமாறு ஏற்பாடு செய்திருக்கிறார்களா? காலையில் என்னுடன் டாக்ஸியில் வந்ததை மறந்துவிட்டாயா? இதோ திருமாங்கல்யம் கூடப் பையில் இருக்கிறதே...” முகுந்தன் விடு விடென்று பேசிக் கொண்டே போனான்.

அதற்கு மேல் அவர்களை அங்கே நிறுத்தி வைக்க இன்ஸ்பெக்டர் விரும்பவில்லை. லோகநாதனையும், கமலத்தையும் போகுமாறு சொல்லிவிட்டார். முகுந்தனிடம் அவர் கூறிய யோசனை இதுதான், “முகுந்தன். நீங்கள் உங்க காதலியை மறந்துவிட வேண்டியதுதான்.

முகுந்தன் ‘ஹா’ வென்று அலறித் தள்ளாடிய வண்ணம் அங்கிருந்து கிளம்பினான்.

அவன் இதயமே உடைந்துவிட்டது. ஆனால், அவனுக்குக் கமலத்தின் மீது எள்ளளவு கோபமும் வரவில்லை. அவள் காதலை மறுக்கவில்லை. ஆனால் பெற்றோர்கள் தூண்டுதலின் பேரில் குடும்பத்துக்கு வரும் அபவாதத்தை நீக்கத்தான் அதுபோலக் கூறியிருக்கிறாள் என்று சமாதானம் செய்து கொண்டாலும், அவன் எதிரேயுள்ள உலகம் இருண்டுதான் தோன்றியது.

## ஹாலி வால்

**ஹா**லிவால் நட்சத்திரம் 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை காணப்படுகிறது. அது கடைசியாகத் தெரிந்தது 1986-ல்.

**அ**மெரிக்காவின் சுதந்திர தினம் ஜூலை 4.

**க**ஞ்சா செடியின் இலக்கியப் பெயர் குல்லை.

**க**டல் கடவுள் பெயரைக் கொண்டுள்ள கிரகம் நெப்டியூன்.

- முக்கிமலை நஞ்சன்

# 9

முகுந்தன் கமலவேணி விஷயம் ஊரெங்கும் எல்லாருக்கும் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிந்தது. பிறருடைய கருத்தைப் பற்றி நமக்குக் கவலையில்லை யல்லவா? ஆனால், எல்லாருமே தனக்கு எதிராகச் சதி செய்தது போன்ற பிரமை முகுந்தனுக்கு எழுந்தது.

வேலை போய்விட்டது, காதலில் தோல்வி. முகுந்தனுடைய பேச்சுக்கும், சுறுசுறுப்புக்கும். முற்போக்கு வாதத்திற்கும் கைகொட்டி ஆமாம் போட்டுச் சுற்றிச்சுற்றி வந்த சக நண்பர்கள்கூட அவனைக் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. ஆனால், முகுந்தனுடன் உதைபட்ட நண்பன் மூர்த்தி மட்டும் முகுந்தனுக்குத் துணையாக இருந்து, ஒரேயடியாக இந்த உலகத்தின் மீது வெறுப்படைந்து முகுந்தன் கண்காணாமல் போய் விடாதபடி ஆதரவு வார்த்தைகள் கூறி வந்தான். வார்த்தைகளால் மட்டுமன்றி அவ்வப்போது பண உதவியும் செய்து வந்தான்.

சென்னையை விட்டே ஓடிவிட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்த முகுந்தனுடைய விருப்பப்படியே மதுரையில் வேலையொன்று கிடைத்தது. சென்னைக்கு வணக்கத்தை தெரிவித்து விட்டு, மானசீகமாகக் கமலத்திடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான். குரோம்பேட்டைக்கும் தாம்பரத்துக்கும் நடுவே வண்டி சென்று கொண்டிருந்தபோது தொலைவில் திருநீர்மலைக் கோயில் தெரிந்தது. குன்றின் மீதிருக்கும் கோயில், முகுந்தன் நெஞ்சில் எண்ண அலைகளை உண்டாக்கியது.

‘நீர்வண்ணா, உன் சந்நிதியில் வந்து நாங்கள் மணக்க உமது அருள் கிடைக்கவில்லை. காலம் இப்படியே போய்விடுமா? புது வாழ்வு அளிக்க உதவக்கூடாதா?” என்று பிரார்த்தித்தான்.

`பிரார்த்தனைக்கு என்றுமே பலனில்லாதில்லை. நவநாகரிக உலகம் பிரார்த்தனைக்கு மதிப்பு கொடுக்காவிடினும் கமலவேணி சதா சர்வ காலம் பிரார்த்தனை செய்து கொண்டேயிருந்தாள். பள்ளி ஆசிரியைத் தொழிலை விட்டு விட்டாள். நெஞ்சில் வேதனையை மறப்பதற்காக வீட்டு வேலைகள் முழுவதையும் இழுத்துப்போட்டுக் கொண்டு செய்ய

லானாள். எவருடனும் பேசுவது கிடையாது. பவுடர் பூசுவதில்லை; மலர் சூடுவதில்லை. அலங்காரப் பொருள்களைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக வீட்டைவிட்டு எங்கும் வெளியே கிளம்புவதில்லை. அதைத்தான் வீட்டாரும் விரும்பினார்கள். மீண்டும் முகுந்தன் தொல்லைக் கொடுப்பானோ என்ற பயம் அவர்களுக்கு இல்லாமலில்லை.

லோகநாதன், முகுந்தன் மீது ஒரு கண்ணை வைத்திருந்தான், வேலையைவிட்டு அவன் நீக்கப்பட்டவுடன் முகுந்தன் 'ஒழிந்தான்' என்ற நிம்மதி அவனுக்கு.

அடுத்தபடியாகத் தன் மைத்துனனுக்குக் கமலவேணியைத் திருமணம் புரிந்து கொடுத்துவிட்டால், அத்துடன் எல்லாம் சுபமாக முடிந்து, குடும்பத்தில் நிம்மதி ஏற்படும் என்று திட்டமிட்டான்.

இந்தச் சமயத்தில் தான் லோகநாதனுக்கு வேலை மாற்றம் ஏற்பட்டது. அதுவும் மதுரைக்குத்தான்?

முகுந்தன் கண்களி லிருந்து மறையச் சென்னையை விட்டுச் செல்வது எவ்வளவோ நல்லது என்று கமலத்தின் பெற்றோர்கள் எண்ணினர். ஆனால், நினைப்பதுபோல் நடப்பதில்லையே! முகுந்தன் வாழும் மதுரைக்கே அவர்களும் சென்றார்கள்.

இடையே எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. காதல், பழங்கதை–



## தெரியுமா?

பூமிக்கும், சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம் 3,84,400 கி.மீ.

உலோகத்தால் ஆன ஊசியை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் சீனர்கள்.

மனித மூளையின் வளர்ச்சி 15-வது வயதில் நின்று விடுகிறது.

ஒரு தேன் கூட்டில் சுமார் 6000 தேனீக்கள் வரை வசிக்கும்.

மூளையின் எடைக்கும், புத்திசாலித்தனத்துக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை.

கனவுபோல் ஆகும் காலம் நெருங்கிவிட்டது. வளப்பமான சூழ்நிலையில் நாலு காசு கிடைத்தவுடன் பழைய துன்ப நினைவை மறப்பதற்காக சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. முகுந்தனின் தாய் தன் மகன் இன்னும் கலியாணம் செய்து கொள்ளாதிருப்பது குறித்துத் தினமும் வருந்தத் தொடங்கினாள். பலநாள் அன்ன ஆகாரமில்லாமல் பிடிவாதம் பிடிப்பாள். தாயின் கடைசி கால ஆசையைத் தட்ட மனமில்லாமல் முகுந்தன் அவள் விருப்பப்படியே கலியாணம் செய்துகொண்டான். அவன் தன் நெஞ்சத்துக்குத் துரோகம் செய்து இதய இலட்சியத்துக்கு மாறாக மணந்து கொண்டான், மங்கை நல்லாள் ஒருத்தி, ஆனால் நீண்டநாள் குடும்பம் நடத்தவில்லை. இரண்டாவது வருட ஆரம்பத்திலேயே பெண் குழந்தை ஒன்றைப் பெற்றுவிட்டுத் தன் கணவனின் புனிதமான சபதத்திற்குக் களங்கம் விளைவிக்க விருப்பமில்லாது உலகை விட்டே நீங்கிவிட்டான். ஆறுமாசச் சிசு முகுந்தனுக்கு இந்த உலகப் பற்றுதலைக் கொஞ்சம் ஒட்டி வைத்தது. ஒரு வருடம் வரை அவனும், வயதான தாயும் சேர்ந்து எப்படியோ தட்டுத்தடுமாறி குழதையை வளர்த்து விட்டார்கள். பிறகு வளர்ப்பதில் தான் சங்கடங்கள் வந்து சேர்ந்தன. 'பாலர் பரிபாலன் சங்கம்' என்று ஒன்றிருந்தது. அதில் இளங்குழந்தைகளைப் பாதுகாக்கிறார்கள் என்று யாரோ சொல்லக்கேட்ட முகுந்தன் பாலர் பரிபாலன சங்கத்தைத் தேடிச் சென்றான்.

கமலவேணி மதுரையை யடைந்தவுடன் கமலத்தின் பெற்றோர்கள் ஒருவர்பின் ஒருவராக ஒரு வருட காலத்திற்குள் இறந்துவிட்டார்கள். பிறகு அந்த விட்டில் லோகநாதனுடன் வாழ விருப்பமில்லாமல் கமலம், முன்போல் குழந்தைகளுக்குச் சேவை செய்ய முழுநேர ஊழியராகப்

பாலர் சங்கத்தில் வேலை ஏற்றாள். அதிலிருந்து தொடர்ந்து ஓர் இளஞ் சந்நியாசினி போல விருப்பு வெறுப்பற்றுப் பணியாற்றி வந்தாள்.

அந்தச் சங்க தலைவியோடு முகுந்தன் பேசிக் கொண்டிருக்கும் போதுதான் கமலவேணி அங்கு வந்தாள். எதிர்பாரதாவிதமாக முகுந்தனைச் சந்தித்ததும் அவள் உள் மனம் 'திக் கென்றது. திக்பிரமை அடைந்து செயலற்று நின்றுவிட்டாள். ஒருகண நேரம்தான் இருவர் கண்களும் சந்தித்தன. மறுகணம் கமலம் முகத்தை திருப்பிக் கொண்டு அங்கிருந்து போய்விட்டாள். முகுந்தனுக்குத் தான் காண்பது நிஜமா, இந்த உலகத்தில் தான் இருக்கிறோமா என்ற சந்தேகம் தோன்றக் காரணமில்லை. மதுரையில்தான், பாலர் பரிபாலன சங்கத்தில்தான். அதன் தலைவி எதிரில்தான் இருக்கிறோம் என்பது அவனுக்குத் தெரியாதா? அதற்குமேல் அவனுக்குப் பேச்சு ஓடவில்லை. குழந்தையைப் பள்ளியில் சேர்ப்பது பற்றிப் பேச வந்ததை மறந்தான். அவன் உள்ளத்தில் பழைய நம்பிக்கை மீண்டும் உதமாயிற்று.

மாலை பள்ளிக்கூடம் விடும்வேளை வரை வெளியே பரந்து கிடந்த தோட்டத்தின் ஓரேத்தில் காத்திருந்தான். கமலவேணி அவசர அவசரமாக வந்து கொண்டிருந்தாள்.

முகுந்தன் குதித்தெழுந்து அவளெதிரே ஓடினான். கமலம் பேசவில்லை.

“கமலம் உன்னைக் காண்பேனா என எண்ணியிருந்தேன். மூன்று வருடங்களுக்குப் பிறகு உன்னைச் சந்திப்பதற்குள்தான் எத்தனை மாறுதல்''– முகுந்தன் இன்னும் தொடர்ந்து பேசியிருப்பான்; கமலத்தின் கடுகடுத்த கண்கள், பாறையாக மாறியிருந்த இதயம் அதைப் பிரதிபலிக்கும் முகம் எல்லாம் அவனை மேலே பேசவிடவில்லை.

எய்ட்ஸ் நோய் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு 1980– சென்னையில் முதன் முதலில் எய்ட்ஸ் பரவிய ஆண்டு 1986.

ஒலிம்பிக் விளையாட்டும் சின்னத்தில் பின்னிப் பிணைந்துள்ள ஐந்து வளையங்களும் ஐந்து கண்டங்களைக் குறிக்கின்றன.

- முக்கிமலை நஞ்சன்

"க–ம–ல–ம்"

கமலம் இப்பொழுது வேறு புறமாகத் திரும்பிக் கொண்டாள்.

"ஏன் இங்கு வந்தீர்கள்? அமைதியாக நான் வாழ்வது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? போய்விடுங்கள்; போய் விடுங்கள் இன்னும் கொஞ்சம் காலமாவது வேதனையின்றி என்னை வாழ விடமாட்டீர்களா?"– கமலத்தின் குரலில் ஆத்திரமும், அழுகையும் கலந்திருந்தன.

முகுந்தன் திடுக்கிட்டான். இனிய மொழியாள் கமலமா இப்படிப் பேசுகிறாள்?

இன்னும் காதல் நினைவு மாறாது பசுமையோடு இருப்பாளென எண்ணிய அவளா இப்படிப் போசுகிறாள்? ஆம்; அவளேதான், போலீஸ் ஸ்டேஷனில் பொய்கூறிய அவளேதான். ஆனால், அந்தப் பொய்யிலும் ஒரு மெய் இருந்ததால் தான் அவனே உயிர் வாழ்ந்தான். இப்பொழுது,

**'காதல் காதல் காதல்:**
**காதல் போயிற் காதல் போயிற்**
**சாதல், சாதல் சாதல்.**

இனி அந்த முடிவுதானா? முடியாது. முடியாது. அந்த முடிவுக்கு வரமுடியாது. என் பிரதி பிம்பமான சின்னஞ் சிறு குழந்தைக்கு ஒரு வழி செய்யாத தவறான முடிவுக்கு வரமாட்டேன் என்று துடிதுடித்து ஏதோ பேச மீண்டும் திரும்பினான்.

'அமைதியான வாழ்வைக் கெடுக்காதீர்கள்
அமைதியான வாழ்வைக் குலைக்காதீர்கள்
அமைதியான வாழ்வை அழிக்காதீர்கள்.'
அதோ கமலம் கிளம்பிப் போகிறாளே...!

முகுந்தன் தள்ளாடிய வண்ணம் எதிர்த் திசையில் திரும்பி நடந்து கொண்டிருந்தான். அவன் நெஞ்சில் எந்த எண்ணமும் உதிக்கவில்லை.

முகுந்தனை அப்படி ஏசி அனுப்பிய பிறகு கமலம் தன்னைத் தானே நொந்து கொண்டது உண்மை. ஓடிப்போய் அவன் காலில் பணிந்தது உண்மை. ஆனால், அவர்கள் மணக்கவேயில்லை.

முகுந்தனுக்குச் சித்தப்பிரமை பிடித்துவிட்டது. தன்னெதிரே நிற்கும் கமலம்கூட அவனுக்குத் தெரியவில்லை. அதிர்ச்சியால் ஏற்பட்ட

மயக்கத்தால் வீழ்ந்துவிட்ட அவனது வீட்டு விலாசத்தை விசாரித்து அவனைக் கொண்டு சேர்ப்பதற்குக் கமலம் வெகுபாடுபட்டு விட்டாள். வீடு போவதற்குள்ளேயே உடல் தணலாய்க் கொதித்தது. முகுந்தனின் தாயார் இடுப்பில் ஒரு வயதுக்குழந்தையை வைத்துக்கொண்டு செய்வதறியாது திகைத்தாள். கமலம் ஓடிஓடி அலைந்து பெரிய பெரிய டாக்டர்களை அழைத்து வந்து பார்க்கச் செய்தாள். பலனில்லாது போய்விட்டது. மூன்றாம் நாள் முகுந்தன் இந்தப் பாழும் உலகைவிட்டே மறைந்துவிட்டான். அவ்வளவுதான் கூறமுடியும். இந்த நல்ல நாளில் அதற்குமேல் வர்ணிக்கப் பிடிக்கவில்லை.

கமலவேணியின் மடியில்தான் முகுந்தனின் மகள் வளர்ந்தாள். முகுந்தனின் தாயைத் தன் மாமியாகவே பாவித்துக் காப்பாற்றினாள்.

திலகவதியார் கதையைப் படித்திருக்கிறோமே சரித்திரத்தில், தற்கால யுகத்தில் கமலவேணி மாபெரும் இலட்சியப் பெண்ணாக வாழ்ந்தாள். மலரிட்டு முடியாமல், திலகமிடாமல், உலக சுக வாழ்வை வெறுத்து வீட்டில் முகுந்தன் மகளை வளர்ப்பதிலும் வெளியே அனாதைக் குழந்தைகளை வளர்ப்பதிலுமாகக் காலத்தைச் செலவிட்டாள்.

முகுந்தனின் மகள் – ஏன்– கமலதின் மகள் என்று கூறலாம், திருநிறைச் செல்வி மங்கையர்க்கரசி மங்கையாகி மணப்பருவம் அடைந்த போது அவள் காதலித்த மணாளனை அவன் எந்தச் சாதியான் என்றும் பாராமல் இன்று திருமணம் ஆண்டவன் சந்நிதியில் செய்து வைக்கிறாள்.

அதோ பாருங்கள் ! திருநிறைச் செல்வி மங்கையர்க்கரசியும், திருநிறைச் செல்லவன் கபாலீஸ்வரன் பி.ஏ.யும் கமலவேணியை வணங்கும்போது அவள் கண்கள் கலங்கி இரு நீர்த்துளிகள் அவர்கள் மீது வீழ்கின்றனவே, நல்ல நாளில் கண்ணீர் வரலாமா ?

அவை இன்பக் கண்ணீர். தன் வாழ்வில் கைகூடாத ஒன்றைத் தன் வாழ்வில் காணக் கிடைத்தற்கரிதான, புதுமையும், புரட்சியும் நிறைந்த திருமணம் ஒன்றைத் தன், மகளுக்கு நிறைவேற்றியதை வானுலகிலிருந்து முகுந்தன் பார்த்து ஆசீர்வதிப்பதை அறிந்து அவள் இதயத்தினின்று பொங்கி வழியும் இன்பக் கண்ணீரல்லவா அது!

(முற்றும்)

# மாடெல் மில்லியனேர்

ஒருவன் செல்வச் சீமானாக இல்லாதவரை, அவன் வசீகரமானவனாக இருப்பதில் ஒரு பயனுமில்லை.

காதல் பணக்காரர்களுக்குச் சாதகமாக இருக்கிறது. வேலையற்றவனின் தொழில் அதுவல்ல. ஏழை நடைமுறை சார்ந்தவனாகவும், கிளர்ச்சியற்றவனாகவும் இருக்க வேண்டும். கவர்ச்சியாக இருப்பதைக் காட்டிலும், ஒரு நிரந்தரமான வருமானமிருப்பது சிறந்தது.

ஹக்கீ எர்ஸ்கின் ஒரு போதும் உணர்ந்தறியாத நவீன வாழ்க்கையின் மிகப் பெரிய உண்மைகள் இவை. பரிதாபத்திற்குரிய ஹக்கீ! அறிவு பூர்வமாக, அவன் மிகுந்த முக்கியமானவனல்ல என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அவனுடைய வாழ்க்கையில் ஓர் அறிவுக் கூர்மையான அல்லது ஒரு தீய வார்த்தையை அவன் சொன்னதில்லை.

ஆனால், அவன் ஆச்சரியப்படத்தக்க விதத்தில், பழுப்பு முடி, தெளிவான பக்க வாட்டுத் தோற்றம், இளம் பழுப்புக் கண்கள் ஆகியவற்றோடு அழகான தோற்றமுடையவனாக இருந்தான்.,

அவனுடைய தந்தை குதிரைப் படை வாளையும், பதினைந்து தொகுதிகள் உடைய தீபகற்பப் போரின் சரித்திரத்தையும் அவனுக்கு விட்டுச் சென்றிருந்தார்.

ஹக்கீ முதலாவதை (வாளை) முகம் பார்க்கும் காண்ணாடிக்கு மேலே தொங்க விட்டிருந்தான். இரண்டாவதை (15 தொகுதிகளுடைய சரித்திர நூல்) அலமாரியில் ரஃப்புடைய வழிகாட்டி (ruffs guide) க்கும் பெய்லியுடைய சஞ்சிகை (bailey's magazine) க்கும் இடையில் வைத்திருந்தான். அவனுடைய வயதான அத்தை அனுமதித்திருந்த ஆண்டுகள் இருநூறில் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தான்.

அவன் ஒவ்வொன்றையும் முயற்சித்திருந்தோன். ஆறு மாதங்களுக்கு ஸ்டாக் எக்ஸ்சேஞ்ஜில் போயிருக்கிறான். ஆனால், ஒரு வண்ணத்துப்பூச்சி எருதுகளுக்கும், கரடிகளுக்கும் மத்தியில் என்ன செய்ய முடியும்? கொஞ்ச காலம் தேயிலை வியாபாரியாக இருந்திருந்தான். ஆனால்,

மூலம் : ஆஸ்கர் வைல்டு
தமிழில்: - டி.நமசிவாயம்

சீக்கிரமே சலிப்படைந்து விட்டான். பிறகு உலர்ந்த ஷெர்ரி(வெண்மது) விற்பனை முயன்று பார்த்தான். அது பதிலளிக்கவில்லை. ஷெர்ரி கொஞ்சம் அதிகமாக உலர்ந்து விட்டது. மொத்தத்தில், அவன் எதுவுமே ஆகவில்லை - பூரணமான பக்கவாட்டுத் தோற்றமுடைய, ஆனால் வேலையில்லாத, ஆனால் மகிழ்ச்சியான ஆனால் முடிவான பயனற்ற ஓர் இளைஞனானதைத் தவிர,

விஷயங்களை இன்னும் மோசமாக்க, அவன் காதலித்தான். அவன் காதலித்த பெண் லாரா மொர்ட்டன். ஓய்வு பெற்ற படைத் தலைவர் மொட்டனின் மகள். அவர் தன்னுடைய உறுதியையும், செரிமானத்தையும் இந்தியாவிலேயே இழந்து விட்டிருந்தார். மீண்டும் அவற்றில் எந்த ஒன்றையும் ஒருபோதும் அவர் அடையவே இல்லை.

ஹக்கீயும், லாராவும் லண்டனில் மிகவும் அழகான ஜோடிகள். படைத் தலைவர் ஹக்கீயின் மேல் மிகவும் பிரியமாக இருந்தார். ஆனால் நிச்சயதார்த்தம் பற்றிக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

"உனக்குச் சொந்தமாக, எப்போது பத்தாயிரம் பவுண்டுகள் கிடைக்கிறதோ, அப்போது என்னிடம் வா. நாம் அதைப் பற்றிப் பேசுவோம்." என்று அவர் சொல்வது வழக்கம்.

அந்த நாட்களில் ஹக்கீ மிகவும் வாட்டம் கொண்டவனாகக் காணப்பட்டான். ஆறுதலுக்காக லாராவைச் சென்று பார்ப்பான்.

ஒருநாள் காலை, அவன் ஹாலன்ட் பூங்காவுக்குச் செல்லும் வழியில் - அங்குதான் மொர்ட்டன்கள் வசித்தார்கள் -



## தெரியுமா?

உலகில் மிகவும் ஆற்றல் மிக்க ரேடியோ தொலைநோக்கிகளுள் உதகமண்டலத்தில் உள்ளதும் ஒன்று. இதன் நீளம் 530 மீட்டர். அகலம் 30 மீட்டர்.

- முக்கிமலை நஞ்சன்

அவனுடைய நண்பனான ஆலன் ட்ரெவரைப் பார்ப்பதற்காக நின்றான். ட்ரெவர் ஓர் ஓவியன். உண்மையில், இந்த நாட்களில் அதிலிருந்து தப்பியவர்கள் ஒருவருமில்லை. ஆனால், அவன் ஒரு கலைஞனாகவுமிருந்தான். கலைஞர்கள் ரொம்ப அபூர்வம்.

தனிப்பட்ட முறையில் அவன் புள்ளி விழுந்த முகமும், சிவப்பும் - கரமுரடான தாடியும் கொண்ட ஒரு விநோதமான முரட்டுப் பயல் என்ற போதிலும், பிரஷைக் கையில் எடுத்துவிட்டால், அவன் உண்மையான கை தேர்ந்த கலைஞன்தான். அவனுடைய உல்லாசங்கள் ஆவலுடன் தேடி அடையப்படும். முதலில் அவன் ஹக்கீயால் மிகவும் கவரப்பட்டிருந்தான். அது அவனுடைய தனிப்பட்ட வசீகரத்தின் காரணமாக என்று முற்றிலும் ஒப்புக் கொள்ளப்படும்.

"ஓர் ஓவியன் அறிந்து கொள்ள வேண்டிய மக்கள் யாரென்றால், சாதாரணமாகவும், அழகாகவும் இருக்கிற மக்கள்தான். தங்களுடைய உருவ அமைப்பில் அக்கறை காட்டுகிற ஆண்களும், கண்மணிகளாக இருக்கிற பெண்களும் உலகத்தை ஆளுகிறார்கள்" என்று அவன் சொல்வது வழக்கம் என்ற போதிலும், அவன் ஹக்கீயை நன்றாக அறிந்து கொண்ட பிறகு, அவனுடைய பிரகாசமான, உல்லாசமான ஆர்வத்தையும், அவனுடைய பெருந்தன்மையை, விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாத சுபாவத்தை மிகவும் நேசித்தான்.

ஹக்கீ உள்ளே வந்ததும், ஒரு பிச்சைக்கார மனிதனின் ஆச்சரியப் படத் தக்க முழு உருவப் படத்திற்கு இறுதிக் கட்ட வர்ணம் தீட்டுதல்களில் ட்ரெவர் ஈடுபட்டிருந்ததைக் கண்டான். கூடத்தின் ஒரு மூலையில் உயர்த்தப்பட்டிருந்த ஒரு மேடையில் பிச்சைக்காரன் நின்று கொண்டிருந்தான். அவனொரு தளர்ந்த கிழட்டு மனிதன். சுருக்கம் விழுந்த ஆட்டு தோலைப் போல முகமுடையவன். மிகப் பரிதாப்படத்தக்க தோற்றம். அவனுடைய தோளுக்கு மேலே கிழிந்ததும், கந்தலானதுமான முரடான ஒரு பழுப்பு மேலங்கி தொங்கியது.

அவனுடைய கெட்டியான பூட்ஸ்கள் உலர்ந்தும், ஒட்டுப் போடப்பட்டுமிருந்தன. ஒரு கையினால் ஒரு முரடான கோலைப் பிடித்துக் கொண்டு சாய்ந்திருந்தான். மற்றொரு கையினால், பிச்சைக்காகப் பிய்ந்து போன தொப்பியை நீட்டிப்

பிடித்துக் கொண்டிருந்தான்.

"என்ன அதிசயிக்கத்தக்க மாதிரி (model) வடிவம்!" என்று முணுமுணுத்தான், ஹக்கீ - அவனுடைய நண்பனோடு கை குலுக்கிய போது.

"ஓர் அதிசயிக்கத்தக்க மாதிரி வடிவம்!" என்று உரத்த குரலில் கத்தினான். "நானும் அப்படித்தான் நினைக்க வேண்டும். அவன் மாதிரி இருக்கிற இப்படிப்பட்ட பிச்சைக் காரர்களைத் தினசரி சந்திக்க முடியாது. இவனைக் கொண்டு ரெம்ப்ராண்ட் எந்த விதமான சிலையைச் செதுக்குவான்?

"பரிதாபத்திற்கு கிழட்டுப் பயல்! எவ்வளவு சோகமாக அவன் நிற்கிறான்! ஆனால், நான் நினைக்கிறேன், உன்னைப் போன்ற ஓவியர்களுக்கெல்லாம், அவனுடைய முகம்தான் அவனுடைய அதிர்ஷ்டம்!"

"நிச்சயமாக. ஒரு பிச்சைக்காரன் மகிழ்ச்சியாக இருப்பதை நீ விரும்ப மாட்டாய், இல்லையா?" என்றான், ட்ரெவர்.

"ஒரு மாடெல் ஓர் அமர் விற்கு (sitting) எவ்வளவு பெறுகிறார்?" என்று கேட்டான் ஹக்கீ, ஒரு மெத்தையில் சௌகர்யமான ஓர் ஆசனத்தைக் கண்டுபிடித்துக் கொண்டு.

"ஒரு மணிக்கு ஒரு ஷில்லிங்."

"உன்னுடைய படத்திற்கு நீ எவ்வளவு பெறுகிறாய், ஆலன்?"

"ஓ, இதற்காக இரண்டாயிரம் எனக்குக் கிடைக்கிறது."

"பவுண்டுகள்?"

"கினீயாக்கள். ஓவியர்கள், கவிஞர்கள், மருத்துவர்கள் எப்பொழுதும் கினீயாக்களையே அடைகிறார்கள்."

"நல்லது. மாடெல் ஒரு சதவீதக் கணக்கில் பெற வேண்டுமென்று நான் நினைக்கிறேன்." என்றான், ஹக்கீ - சிரித்துக் கொண்டே. "அவர்கள் முற்றிலும் கடுமையாக வேலை செய்கிறார்கள் - நீ செய்வதைப் போல!"

"அறிவில்லாத்தனம்! அறிவில்லாத்தனம்! ஏன், தனியாக வர்ணங்களில் படுத்திருக்கும், நாள் முழுவதும் படத்தைத் தாங்கியிருக்கும், முக்காலிக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் தொல்லையைப் பார். ஹக்கீ! பேசுவது உனக்கு மிகவும் நல்லது. உடலுழைப்பின் கௌரவத்திற்கேற்ப கலை பெற்றுக் கொள்ளக்கூடிய நேரங்களுண்டு என்று உனக்கு உறுதியளிக்கிறேன். ஆனால், நீ சளசளக்க வேண்டாம். நான் மிகவும் பரபரப்பாக இருக்கிறேன். ஒரு சிகரெட்டைப் புகை. அமைதியாக இரு," என்றான், ஓவியன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, வேலைக்காரன் உள்ளே வந்தான். படங்களுக்குச் சட்டம் போடுகிறவன் ட்ரெவரிடம் பேச விரும்புகிறானென்று சொன்னான்.

"ஓடிப் போய்விடாதே, ஹக்கீ. ஒரு விநாடியில் திரும்பி வந்து விடுவேன்" என்றான், டிரெவர். வெளியே போகும்போது.

ட்ரெவர் இல்லாததைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு,

## பெண்கள் சளைத்தவர்களல்ல!

உலகிலேயே மிக உயரமான சிகரமான இமயத்தின் எவரெஸ்டில் 1975-ம் ஆண்டிலேயே இரண்டு பெண்மணிகளும் ஏறி சாதனை படைத்திருக்கின்றனர். முதலாமவர், ஜப்பானைச் சேர்ந்த ஜங்கோ தபை. இரண்டாமவர், சீனாவைச் சேர்ந்த பன்டாங்.

- முக்கிமலை நஞ்சன்

கிழட்டுப் பிச்சைக்காரன், அவனுக்குப் பின்னாலிருந்த மரப்பெஞ்ச்சில் ஒரு கண நேரம் ஓய்வெடுத்தான். அவன் நம்பிக்கை இழந்தவனைப் போலவும், வெறுக்கத் தக்கவனைப் போலவும் காணப்பட்டான். அவன் மேல் அனுதாபப்படாமலிருக்க ஹக்கீயால் முடியவில்லை. தன் சட்டைப் பைக்குள் எவ்வளவு பணமிருக்கிறதென்று பார்த்தான்.

அவனிடமிருந்ததெல்லாம் ஒரு சவரனும், சில செப்புக் காசுகளும்தான். "பரிதாபத்திற்குரிய கிழவன்!" என்று தனக்குத்தானே நினைத்தான். "இது, என்னை விட, அவனுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆனால், பதினைந்து நாள் போக்குவரத்துச் செலவுக்குப் போதாது போலத் தோன்றுகிறது."

கூடத்தின் குறுக்கே நடந்து, சவரனைப் பிச்சைக்காரனின் கையில் போட்டான். கிழவன் திகைத்தான். ஒரு மெல்லிய புன்னகை அவனுடைய உலர்ந்த உதட்டின் குறுக்கே மின்னலடித்தது,

"நன்றி, ஐயா!" என்றான். "நன்றி."

பிறகு, ட்ரெவர் வந்தான். என்ன செய்து விட்டோமென்று கொஞ்சம் வெட்கப்பட்டுக் கொண்டே, ஹக்கீ விடைபெற்றான். அன்றைய நாளை அவன் லாராவுடன் கழித்தான். அவனுடைய ஊதாரித்தனத்திற்காக ஒரு வசீகரமான திட்டு அவளிடமிருந்து அவனுக்கு கிடைத்தது. பிறகு, வீட்டுக்கு நடந்தான்.

அன்றிரவு பதினோரு மணியளவில் அவன் பேலெட் க்ளப்புக்குள் உலாவினான். அங்கு ட்ரெவரைக் கண்டான். அவன் தனியாகப் புகைக்கும் அறையில் ஹாக் மற்றும் செல்பஜெர் குடித்துக் கொண்டிருந்தான்.

"நல்லது, ஆலன். உன் படத்தை முடித்துவிட்டாயா?" என்று கேட்டான், ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே,

"முடித்தாயிற்று. சட்டம் போட்டாயிற்று, பையா," என்றான், ட்ரெவர். "அதிருக்கட்டும். நீ ஒரு வெற்றியைப் பெற்று விட்டாய். நீ பார்த்த அந்தக் கிழட்டு மாடெல் உன் மேல் மிக்க ஈடுபாடு கொண்டு விட்டான். உன்னைப் பற்றிய எல்லா விவரங்களையும் - நீ யார், எங்கே வசிக்கிறாய், உன் வருமானம் எவ்வளவு, வெற்றி வாய்ப்பு நிலை

எல்லாவற்றையும் - நான் அவனுக்குச் சொல்லிவிட்டேன்."

"என் அன்பான ஆலன்! நான் வீட்டுக்குப்போகும் போது, எனக்காக அவன் காத்துக் கொண்டிருப்பதை ஒருவேளை கண்டுபிடிப்பேன். ஆனால், உண்மையாக, நீ கேலி செய்கிறாய். பரிதாபத்திற்குரிய கிழவன்! அவனுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன். ஒருவன் அவ்வளவு சோகமாக இருப்பது பயங்கரமானதென்று நினைக்கிறேன். என் வீட்டில் பழைய துணிகள் குவிந்து கிடக்கின்றன. அவற்றில் ஏதாவது பற்றி அவன் கவனமெடுத்துக் கொள்வானென்று நினைக்கிறாயா? ஏன், அவனுடைய கந்தலாடைகள் கிழிந்து தொங்கு கின்றன," என்றான், ஹக்கீ.

"ஆனால், அவன் அழகாய்த் தோன்றுகிறான்," என்றான், ட்ரெவர். "எவ்வளவு கொடுத்தாலும், அவனை ஒரு பெண்ணின் கோட்டில் ஓவியமாக வரையமாட்டேன். கந்தைகளென்று நீ சொல்வதை நான் காதலென்று அழைக்கிறேன். உனக்கு வறுமையாகத் தெரிவது, எனக்கு ஓவியம் தீட்டுவதற்கு ஏற்றதாகத் தெரிகிறது. எனினும் உன்னுடைய அன்பளிப்பைப் பற்றி நான் அவனிடம் சொல்வேன்."

"ஆலன், ஓவியர்களான நீங்கள் இதயமில்லாதவர்கள்!" என்றான், ஹக்கீ.

"ஓர் ஓவியனுடைய இதயம் அவனுடைய தலை. தவிர, எங்களுடைய வேலை, நாங்கள் பார்ப்பதைப் போலவே, இந்த உலகத்தையும் உணரச் செய்ய வேண்டுமென்பது. எங்களுக்குத் தெரிந்தது போல, அதை மாற்றியமைக்க வேண்டுமென்பதல்ல. லாரா எப்படி இருக்கிறாளென்று சொல். கிழட்டு மாடெல் அவளைப் பற்றி மிகவும் ஆர்வமுள்ளவனாக இருக்கிறான்," என்றான், ட்ரெவர்.

"அவளைப் பற்றி நீ அவனிடம் பேசினாயா?" என்று கேட்டான், ஹக்கீ.

"நிச்சயமாக நான் பேசினேன். கருணையில்லாத படைத் தலைவரைப் பற்றியும், அழகான லாராவைப் பற்றியும், 10000 பவுன் பற்றியும் அவனுக்குத் தெரியும்."

"என்னுடைய தனிப்பட்ட விஷயங்களைப் பற்றிய எல்லா வற்றையும் அந்தக் கிழட்டுப் பிச்சைக்காரனிடம் சொல்லி விட்டாயா?" என்று கோபத்தினால் முகம் சிவக்க ஹக்கீ கேட்டான்.

"என் அன்பான பையா! நீ கிழட்டுப் பிச்சைக்காரனென்று அழைக்கும் அவன், ஐரோப்பாவில் செல்வச் சீமான்களாக இருப்பவர்களில் ஒருவன். லண்டன் முழுவதையுமே நாளைக்கே அவனால் வாங்க முடியும் - அவனுடைய கணக்கிலிருப்பதை விட அதிகமாக எடுக்காமல்,. ஒவ்வொரு தலைநகரத்திலும் அவனுக்கு ஒரு வீடு இருக்கிறது. தங்கத் தட்டில் சாப்பிடுகிறான். அவன் தீர்மானித்தால் ரஷ்யா போருக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்த முடியும்." என்றான், ட்ரெவர்.

"நீ சொல்வதன் அர்த்தமென்ன?" என்று பிரமித்தான், ஹக்கீ.

"நான் என்ன சொல்கிறேனே னென்றால்... நீ இன்றைக்கு என் ஓவியக் கூடத்தில் பார்த்த கிழவன்தான் ஹாஸ்பெர்க் பிரபு. அவன் என்னுடைய ஆப்த நண்பன். என் படங்கள் எல்லாவற்றையும் வாங்குகிறவன். ஒரு பிச்சைக்காரனைப் போலப் படம் வரைய வேண்டுமென்று, ஒரு மாதத்திற்கு முன்னால், அவன் ஒரு பொறுப்பைக் கொடுத்தான். அவனுடைய கந்தலாடைகளில், ஒரு சிறப்பு மிக்க உருவத்தைக் கொடுத்தானென்று சொல்ல வேண்டும்.

"அல்லது ஒரு வேளை என்னு டைய கந்தலாடைகளில். அவை நான் ஸ்பெயினில் வாங்கிய பழைய உடைகள்."

"பிரபு ஹாஸ்பெர்க்!" கூவினான். ஹக். "கடவுளே! நான் அவனுக்கு ஒரு சவரன் கொடுத்தேன்." பெருங்குழப்பத்தோடு ஒரு சாய்வு நாற்காலிக்குள் அமுங்கினான்.

"ஒரு சவரன் கொடுத்தாயா, அவனுக்கு!" கத்தினான், ட்ரெவர். கடகடவென்று சிரித்தான். "என் அன்பான பையா! அதை நீ மீண்டும் பார்க்கவே முடியாது."

"நீ சொல்லியிருக்கலாமென்று நினைக்கிறேன். ஆலன். நான் என்னையே இப்படிப்பட்ட ஒரு முட்டாளாக்கிக் கொள்ளும்படி செய்துவிட்டாய்." என்றான், ஹக்கீ.

"நல்லது. விளைவுகளைப் பற்றி அக்கறை காட்டாத வகையில், பிச்சைக் காசுகளை நீ பங்கிட்டுக் கொண்டே திரிவாய் என்று என் மனதிற்குள் நுழையவே இல்லை.

"ஓர் அழகான மாடெலுக்கு நீ கொடுக்கும் முத்தத்தை என்னால் புரிந்து கொள்ள முடியும். ஆனால், அவலட்சணமான ஒருவனுக்கு நீ கொடுத்த ஒரு சவரனைப் பற்றி - கடவுளே! இல்லை. உண்மை என்னவென்றால், இன்று நான் வீட்டிலேயே இல்லை. நீ வந்தபோது, ஹாஸ்பெர்க் தன்னுடைய பெயரைக் குறிப்பிடுவதை விரும்புவானா என்றே எனக்குத் தெரியாது. அவன் முழு ஆடையிலில்லை என்று உனக்குத் தெரியும்," என்றான், ட்ரெவர்.

"எவ்வளவு திறமையற்றவன் நானென்று அவன் நினைத்திருக்க வேண்டும்!" என்றான், ஹக்கீ.

"இல்லவே யில்லை. நீ அவனை விட்டுபோன பிறகு உச்ச பட்ச உணர்ச்சிகளில் அவனிருந்தான். தனக்குத்தானே சிரித்துக் கொண்டும், அவனுடைய சுருங்கிய கைகளை ஒன்றாகச் சேர்த்துத் தேய்த்துகொண்டுமிருந்தான். உன்னைப் பற்றிய எல்லா விவரங் களையும் அறிந்து கொள்வதற்கு அவன் அவ்வளவு ஆர்வம் காட்டினா னென்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், இப் பொழுது எல்லாம் தெரிகிறது. உன் சவரனை உனக்காக அவன் முதலீடு செய்வான், ஹக்கீ ஆறு மாதத்திற்கொரு தடவை அதற்கு வட்டியும் கொடுப்பான். விருந்திற்குப் பிறகு, பிரதானமான கதையும் அவனுக்குச் சொல்வதற்கிருக்கும், " என்றான், ட்ரெவர்.

“நானொரு துரதிர்ஷ்டம் பிடித்த பிசாசு!” என்று உறுமினான், ஹக்கீ. “நான் செய்யக் கூடிய சிறப்பான விஷயம் படுக்கைக்குப் போவதுதான். என் அன்பான ஆலன், யாரிடமும் இதைப் பற்றிச் சொல்ல வேண்டாம். ரோவில் என் முகத்தைக் காட்டுவதற்கே எனக்குத் துணிவில்லை.”

“அறிவற்ற தனம்! அது உன்னுடைய மனித நேயப் பண்பின் உயர்ந்த செல்வாக்கைப் பிரதிபலிக்கிறது. ஓடிப் போகாதே. ஹக்கீ. இன்னொரு சிகரெட்டைப் புகை. நீ எவ்வளவு அதிகமாக லாராவைப் பற்றிப் பேச வேண்டுமோ, பேசலாம்,” என்றான், ட்ரெவர்.

ஆனால், ஹக்கீ நிற்கவில்லை. மகிழ்ச்சி இல்லாமல், சிரித்துக் கொண்டிருந்த ஆலனைப் பிரிந்து வீட்டுக்கு நடந்தான்.

அடுத்த நாள், அவன் காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, வேலைக்காரன் ஒரு கடிதத்தைத் கொண்டு வந்தான். அதில் எழுதப்பட்டிருந்ததாவது, ‘மான்ஸியூர் கஸ்டேவ் நாவ்டின், டி லா பார்ட் டி Mலே பிரபு ஹாஸ்பெர்க்.

“மன்னிப்புக்கேட்க அவன் வந்திருக் கிறானென்று நினைக்கிறேன்,” என்று தனக்குத்தானே ஹக்கீ சொல்லிக் கொண்டான். வந்திருப்பவரை வரச் சொல்லும்படி வேலைக்காரனிடம் சொன்னான்.

ஒரு முதிர்ந்த கனவான், தங்கக் கண்ணாடி போட்டுக் கொண்டு, நரைத்த தலையுடன் அறைக்குள் வந்தார். இலேசான ஃப்ரெஞ்ச் உச்சரிப்போடு, “மான்ஸியூர் எர்ஸ்கினோடு பேசுகிற கௌரவத்தை நான் பெறலாமா?” என்றார்.

ஹக்கீ தலை தாழ்த்தினான்.

“நான் பிரபு ஹாஸ் பெர்க்கிடமிருந்து வந்திருக் கிறேன்.” என்று அவர் தொடர்ந்தார். “பிரபு..”

“வேண்டுகிறேன், ஐயா. என் உண்மையான வருத்தத்தை நீங்கள் அவரிடம் தெரிவிக்க வேண்டும்” என்றான் ஹக்கீ.

முதிர்ந்த கனவான், ஒரு புன்னகையோடு, “பிரபு இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கும்படி என்னை அனுப்பி வைத்திருக்கிறார்,” என்றார். முத்திரையிடப்பட்ட ஓர் உறையை நீட்டினார்.

வெளிப்பக்கத்தில் எழுதப் பட்டிருந்ததாவது;

“ஹக் எர்ஸ்கினுக்கும், லாரா மெர்ட்டனுக்கும் ஒரு திருமணப் பரிசு. ஒரு கிழட்டுப் பிச்சைக்காரனிடமிருந்து.”

உள்ளே 10000 பவுனுக்கான ஒரு செக் இருந்தது.

அவர்கள் திருமணம் செய்து கொண்டபோது, ஆலன் ட்ரெவர் அவர்களின் தோழனாக இருந்தான். பிரபு திருமணக் காலை உணவில் ஒரு சொற்பொழிவாற்றினார்.

“மில்லியனேர் மாடெல்கள் அபூர்வமாகத்தானிருப்பார்கள். ஆனால், கடவுளே! மாடெல் மில்லியனேர்கள் அதைவிட அபூர்வம்!” என்றான், ஆலன்.

***

Kunguma Chimizh Fortnightly Registered with the
Registrar of Newspaper for India under No.R.N.42528/83. Price Rs.4.00


விரைவில்...

மே 2013

# ஆன்மிகம்

பலன்

உங்கள் அபிமான தினகரன் குழுமத்திலிருந்து வெளியாகும் தெய்வீக மாத இதழ்



- கல்வியில் உயர்வு உண்டா?
- கல்யாணம் கைகூடுமா?
- கடன் பிரச்னை தீருமா?
- குழந்தை வரம் கிடைக்குமா?
- வீடு, மனை யோகம் உண்டா?
- நல்ல வேலை கிடைக்குமா?

## இந்த குருப் பெயர்ச்சி தரப்போவதுதான் என்ன?

**12 ராசிகளுக்கும் விரிவான பலன்கள்**

**எளிதான பரிகாரங்கள்**